Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER | SM வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம் சில நிமிட நேரத்தில் உங்கள்
கைகளில் பணம்கிடைக்க எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 2223214
E-Mail: smskr@eureka.lk
சிவன்கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 060 2212472
(சீ/2201)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 04 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஜ் 24 (16.02.2004) திங்கட்கிழமை இதழ் :138

## இந்த மாத இறுதியில் மின் கட்டணம் உயரும்!

(கொழும்பு)

இந்த மாத இறுதியில் இருந்து ஒரு அலகுக்கான மின்கட்டணத்தை ஒரு ரூபாவால் அதிகரிக்கவுள்ளதாக மின்சாரசபையின் தலைவர் எம்.சுபைர் தெரிவித்தார்.

இந்தத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான அனுமதியை இலங்கை மின்சாரசபை அரசாங்கத்திடமிருந்து இதுவரை பெறவில்லையெனவும் சுபைர் மேலும் தெரிவித்தார்.

முதல் நானூறு அலகுகளைப் பாவிக்கும் மின் பாவனையாளர்களுக்கு மேலதிக கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாதெனவும். இதனால

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் இளம்பரிதியுடன் இன்று சந்திப்பு!

(யாழ்ப்பாணம்)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே, யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியை இன்று சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இன்று பி.ப 2 மணியளவில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டச் செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறவிருப்பதாகத் தெரியவருகிறது.

## குடாநாட்டு அரசியலில் இருந்து

# விலகிக் கொள்வதாக மகேஸ்வரன் அறிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குடாநாட்டின் அரசியல் செயற்பாடுகளில் இருந்து தான் முழுவதுமாக விலகிக்கொள்கின்றேனென, முன்னாள் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சரான தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.**

காரைநகரில் நேற்று நடைபெற்ற பல. நோ.கூ. சங்கத்தின் தலைமைக் காரியாலயத் திறப்புவிழாவுக்கு கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றியதாவது -

குறைந்த வயதில் - குறைந்த காலப் பகுதியில் இலங்கை அரசியலில் நுழைந்து தமிழ்மக்களுக்கு என்னால் இயன்ற உதவிகளைச் செய்திருக்கிறேன். தமிழ்மக்களின் ஒற்றுமைப்பாட்டை உணர்த்தவும் தமிழ்மக்கள் மத்தியிலுள்ள சுதந்திர உணர்வை வெளிப்படுத்தவுமே நான் குடாநாட்டு அரசியலிருந்து விலகுகிறேன்.

வரப்போகும் தேர்தலை தமிழ்மக்கள் நல்ல முறையில் எதிர்கொண்டு சமாதானத்தை ஏற்படுத்தவல்ல சக்திகளுக்கு தமது வாக்கை வழங்கி, நாட்டில் அமைதியை உருவாக்க வேண்டும்.

நான் யாழ்.குடாநாட்டு அரசியலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளமைக்கு எந்தவொரு அரசியல் பயமுறுத்தல்களோ அல்லது பின்னணிக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை உள்ளூராட்சி தேர்தல் ஆணையாளரால் ஒத்திவைப்பு!

(கொழும்பு)

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவிருந்த அம்பாறை மாவட்டத்தின் ஏழு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அறிவித்துள்ளார்.

இந்த மாவட்டத்தில் 2000 ஆம் ஆண்டு பெப்ரவரி 17 ஆம் திகதி பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களே உள்ளனர். ஆனால், 2002 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பதிவுசெய்யவேண்டிய வாக்காளர்களும், வாக்களிக்கும் வகையில் இந்தத் தேர்தலை நடத்தவேண்டுமென

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுத்தேர்தலை முன்னிட்டு பொலிஸாரின் விடுமுறைகள் ரத்து

(கொழும்பு)

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டதையடுத்து, பொலிஸாரின் விடுமுறைகள் அனைத்தும் ரத்துச்செய்யப்பட்டிருப்பதாக, பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வா அறிவித்தார்.

நாளை முதல் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் ஆரம்பமாகி எதிர்வரும் 24 ஆம் திகதிவரை இடம்பெறவிருப்பதுடன், ஏப்ரல் 2 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெற

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் கண்காணிப்பு எமக்குரிய பணியல்ல!

## போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர்

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான யுத்தநிறுத்தத்தை மட்டுமே கண்காணிக்கும் . தேர்தலைக் கண்காணிப்பது எமது வேலையில்லையென்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மேற்பார்வையின் கீழ் தேர்தல் நடத்தப்படுவது தொடர்பாக ஆராயப்படுவதாக சில ஊடகங்களில் வெளியான செய்தி குறித்து கருத்து வெளியிட்ட போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிறகடோட்ரயர்-

தேர்தலும், யுத்தநிறுத்த கண்காணிப்பும் இரு வேறுபட்ட விடயங்கள். நாம் யுத்தநிறுத்த அமுலாக்கத்தைக் கண்காணிப்பதற்கே இங்கு அழைக்கப்பட்டிருக்கிறோம்.

எமக்கும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் விடயத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

யுத்தநிறுத்தக் கண்காணிப்பை தவிர வேறெந்தச் செயற்பாடும் எமது கவனத்துக்குள் இருக்கவில்லை.

இதேவேளை, யுத்தநிறுத்த அமுலாக்கம் தொடர்பாக ஆராய்வதெற்கென போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ்ஹொவ்டே இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக சம்பந்தன் மேன் முறையீடு!

## ஜோசப் பரராஜசிங்கம் தகவல்

(கொழும்பு)

ஆனந்தசங்கரி தாக்கல் செய்த வழக்கில் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கெதிராக கட்சியின் செயலாளர் நாயகம் ஆர்.சம்பந்தனும் தானும் மேன்முறையீடு செய்யவிருப்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

கட்சியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி, செயலாளர் ஆர்.சம்பந்தனுக்கு எழுதிய கடிதத்தில் வேறு கட்சிகளுடன் இணைத்து கூட்டங்களை நடத்துவதற்குத் தாங்களுக்கு அதிகாரம் இல்லையென எழுதியிருப்பது தொடர்பாக ஜோசப் பரராஜசிங்கத்திடம் கேட்டபோது,

நாங்கள் எந்தக் கட்சிகளுடனும் பேசலாம். அது எமக்கிருக்கும் தனிமனித ஜனநாயக உரிமையெனத் தெரிவித்தார்.

நாங்கள் தமிழரசுக் கட்சி சின்னத்தில் போட்டியிடுவதை ஆனந்தசங்கரி தடுக்கமுடியாது என்றும் அவர் கூறினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி - அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம், சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய நான்கு கட்சிகளின் கூட்டமைப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு - கிழக்கில் போட்டியிடுவதை யாரும் தடுக்க முடியாது.

பெரும்பாலும் தமிழரசுக் கட்சியின் வீட்டுச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பேரினவாதக் கட்சிகள் எதனையுமே தமிழ்மக்கள் ஆதரிக்கமாட்டார்கள்!

## வன்னி திரும்பிய தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

பேரினவாதக் கட்சிகளை தமிழ் மக்கள் நிராகரித்து விட்டார்கள். அவர்கள் அவற்றை அனுசரிக்கமாட்டார்கள் என நம்புகிறோம் என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர். சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று கிளிநொச்சிக்கு திரும்பிய அவரிடம் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும்தெரிவிக்கையில் -

பொதுவாக நாங்கள் எல்லா நாடுகளிலும் எங்களுடைய அவசர, மனிதாபிமான தேவைகள், உதவிகள் சம்பந்தமாக கோரி இருக்கிறோம். அவர்கள் உடனடியாக முடிவு எடுக்க முடியாவிட்டாலும், இங்குள்ள யதார்த்தமான சூழ்நிலையை விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே அது சம்பந்தமாக தாங்கள் கூடிய கரிசனை எடுத்திருப்பதாகவும், சமாதான முன்னெடுப்புகளை தக்கவைக்க வேண்டும் என்றால் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நரந்தரமான மனிதாபிமான தேவைகள் ஒழுங்கு செய்யப்பட வேண்டும். இதில் தாங்கள் மிகவும் உறுதியுடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

அவர்கள் எப்படியான வழிமுறை மூலம் தமது உதவிகளை செய்வது சம்பந்தமாக எங்களிடம் கருத்துக்களைக் கேட்டறிந்தார்கள். விரைவில் ஏதாவதொரு சாதகமான முடிவை எடுப்பார்கள் என நம்புகிறோம்.

இங்குள்ள அரசியற் சூழ்நிலைகள், தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள், எதிர்காலத்தில் இடம்பெறும் சமாதான முன்னெடுப்புகள் சம்பந்தமாக, எங்கள் தலைவருடைய சில கருத்துக்களை கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் பரிமாறிக் கொண்டோம்.

அவர் தனது கருத்துக்கள் சிலவற்றை எங்களிடம் தெரிவித்தார். இதைத் தலைவரின் கவனத்துக்கு கொண்டுசென்று அது சம்பந்தமான முடிவுகளை எடுக்கவுள்ளோம்.

பேரினவாதக் கட்சிகளை எமது மக்கள் நிராகரித்து விட்டார்கள். மீண்டும் தமிழ் மக்கள் பேரினவாதக் கட்சிகளை அனுமதிக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் கண்காணிப்புக் குழுவின் ஊடாக தேர்தல் நடத்துவது சம்பந்தமாக செய்திகள் வருகின்றன. எனினும் இது சம்பந்தமாக எங்கள் தலைவருடன் கலந்தாலோசித்துவிட்டே கருத்துக்கள் தெரிவிக்கவிரும்புகிறேன்.

கடந்த தேர்தல் காலங்களில் இனவாதக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
mail :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# 306 'பி' மாவட்ட லயன்ஸ் கழகம் நடாத்திய சலரோக விழிப்புணர்வு போட்டி முடிவுகள்

(தென்மராட்சி)

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 'பி' மாவட்டப் பிரிவினால் கடந்த நவம்பர் மாதம் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட சலரோக விழிப்புணர்வுப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

லயன்ஸ் கழகங்களிடையே இடம் பெற்ற போட்டிகளில் முதலிடத்தினை தீவக லயன்ஸ் கழகமும், இரண்டாம் இடத்தை நல்லூர், சாவகச்சேரி லயன்ஸ் கழகங்களும் மூன்றாம் இடத்தினை உரும்பிராய், வடமராட்சி லயன்ஸ் கழகங்களும் பெற்றுள்ளன.

'சலரோகத்தை தடுப்போம்' என்ற கட்டுரைப் போட்டியில், முதலாம் இடம் எம்.எவ்.சனோசியா (87, கனால் வீதி, புத்தளம்), இரண்டாம் இடம் சு.க.அமீன் ஷாதிக் (332, பிரதான வீதி, ஏறாவூர்), மூன்றாம் இடம் எ. எச்.ரைஸாத் (ம.நப்நகர் கிண்ணியா - மத்திய கல்லூரி மாணவன்), நான்காம் இடம் சிவாஜினி சிவபாதசுந்தரம் (32, குட்செட் வீதி, வவுனியா), ஐந்தாம் இடம் த.சயேன்திரகுமார் (ஆஸ்பத்திரி வீதி, சங்கானை - யாழ். இந்து மாணவன்), ஆறாம் இடம் ஆ.அருள்மொழி (அரச வீதி, உரும்பிராய்), ஏழாம் இடம் கே.ரி.சதீஸ்குமார் (ஆஸ்பத்திரி வீதி, சங்கானை-யாழ்.இந்து மாணவன்), எட்டாம் இடம் கு.தியாகராசசர்மா (நீர்வேலி வடக்கு, நீர்வேலி), இ.சிவகலா (ஏழாலை மகா வித்தியாலயம், ஏழாலை), ஒன்பதாம இடம் எஸ்.சுபாங்கன் (பூரணகிரி, கே.கே.எஸ் வீதி, கோண்டாவில் - மானிப்பாய் இந்து மாணவன்), தி. மயூரகிரி (அத்தியர் இந்துக் கல்லூரி, நீர்வேலி), பத்தாம் இடம் தி.மாணிக்கவாசகர் (தும்பளை பருத்தித்துறை).

வெற்றிபெற்றோருக்கான பரிசில்கள் மானிப்பாய் நகர மண்டபத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதி நடைபெறும் லயன்ஸ் கழக பிராந்திய மகாநாட்டில் வழங்கப்படுமென சலரோக விழிப்புணர்வு பிரிவு மாவட்ட தலைவர் லயன்டாக்டர் எஸ் அருளானந்தம் அறிவித்துள்ளார். (34)

## தமிழ்த்தினப் போட்டியில் திருமலை மாணவி முதலிடம்



(நவிண்டில்)

2003 ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ்மொழித்தினப் போட்டியில், வடகிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த திருகோணமலை சென்.மேரிஸ் கல்லூரி மாணவி ஆரணி ரஞ்சன் 2 ஆம் பிரிவில் கட்டுரை வரைதல், கடிதம் எழுதுதல் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

அதற்காக இந்த மாணவிக்கு தங்கப்பதக்கம் கிடைக்கப்பெற்றது.

இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரஞ்சன் அநுசூயா தம்பதிகளின் புதல்வியாவார். (116)

## புதிய நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை முச்சக்கர வண்டி சேவைச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்று நடைபெற்றது. தலைவர் பா.பாலமுரளி, உப தலைவர் அ.ராஜ்குமார், செயலாளர் ஜெ. சகிகரன், பொருளார் ஆர்.ரவீந்திரன், ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தக் கூட்டத்தில், ஒவ்வொரு முச்சக்கர வண்டி ஓட்டுநர்களுக்கும் அடையாள அட்டை வழங்குவதாகவும், ஒவ்வொரு பிரதேசங்களுக்குமான பிரதேசத்தைக் குறிப்பதற்கு இலக்கங்கள் வழங்குவதாகவும், தூரங்களுக்கான கட்டணங்கள் அறவிடுவது பற்றியும் தீர்மானம் எடுக்கப்பட்டது என செயலாளர் ஜெ. சசிகரன் தெரிவித்தார். (12)

## மாதர்சங்ககூட்டம்

(சரசாலை)

வேரடிமண் கலை நிகழ்வு சம்பந்தமான விசேட மாதர்சங்கக் கூட்டம் - சரசாலை மத்தி மயூரி அம்பாள் முன்பள்ளியில் நாளை பி.ப 2.30 மணிக்கு நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடலில் இந்தப் பகுதியைச் சேர்ந்த அனைத்து மகளிரையும் கலந்துகொள்ளுமாறு சரசாலை தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் தெரிவித்தார். (24)

# தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் வடமராட்சியில் கணினி அறிமுக வகுப்பு!

(வடமராட்சி)

தமிழீழ மாணவர் அமைப்பினால் வடமராட்சி கிழக்கு பகுதி பாடசாலை மாணவர்களுக்கு, கணினி சம்பந்தமான அறிமுக வகுப்பு கடந்த 10 நாட்களாக நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் - மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் கிளி. மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் கௌரி தலைமையில் நடைபெற்றது.

சிறப்புரைகளை கடற்புலிகளின் மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூரணி, தளபதி மங்களேஸ், காவற்துறை சீர்திருத்தப் பொறுப்பாளர் நரேஸ் ஆகியோர் வழங்கினர்.

இதில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இந்த அறிமுக விழாவில் ஆசிரியர்கள் மாணவர்கள் என 250 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

## சட்ட உதவி மன்ற திறப்பு விழா

பருத்தித்துறை நீதிமன்றத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சட்ட உதவி மன்ற அலுவலகம் இன்று திங்கட்கிழமை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. (17)

## சமாதான நீதிவானாக நியமனம்



யாழ். மாவட்ட பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பொன்னையா சிவபாதம், கடந்த பெப்ரவரி 9 ஆம் திகதி அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ். மாவட்ட நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். இவர் கரவெட்டி ஞானசாரியார் கல்லூரியிலும், பின் கல்விப் பொதுச் சாதாரண தரம் முதல் உயர்தரம் வரை வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் கற்றிருந்தார்.

கம்யூனிஸ்ட் கொள்கையுடையவரான இவர், நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வர்த்தக முகாமையாளராக கடமையாற்றி வந்திருந்தபோதும் கடந்த 2002 ஆம் ஆண்டு முதல் யாழ். மாவட்ட பனை அபிவிருத்திச் சபையின் தலைவராகக் கடமையாற்றி வருகின்றார்.



மகாத்மா வீதி, அல்வாய் வடக்கைச் சேர்ந்த பொ.கணபதிப்பிள்ளை - பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர் அல்வாய் வடக்கு, சீமா ஆலடி விநாயகர் அறங்காவலர் சபையின் ஆயுட்காலத் தலைவரும் சிறந்த சமூக சேவையாளரும் ஆவார். (12)

## ஜோன்.பொஸ்கோ பாடசாலை இல்ல மெய்வல்லுனர் போட்டியிலிருந்து....






திறஞ்சனாஸ் சங்கானை

விஜயகாந்த், சாக்ஷி நடித்த

வாஞ்சிநாதன்

காட்சி நேரம்:11.00, 2.45, 6.00, (பு.நே.)

ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

X-MEN ii

(சி-2196)

ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா நடித்த

ஜெய்

காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30 (பு.நே)

18 ஆம் திகதியிலிருந்து

எங்கள் அண்ணா

(சி-2197)

அருணலு

பெறுமதிமிக்க பரிசில்களை 5ஆம் ஆண்டு புலமைப்பரிசு பெறும் செல்வங்களுக்கு வழங்குகிறது.

உங்களுடைய பிள்ளை புலமைப்பரீட்சையில் சித்தியெய்தி அதிகப்படியான புள்ளிகளை 1ம், 2ம் அல்லது 3ம் இடத்தில் அவருடைய பாடசாலையில் பெற்றிருப்பதுடன் பரீட்சை எழுதும் போது அவரது அருணலு கணக்கில் குறைந்தது ரூபா 5,000/- மீதியாக இருந்திருந்தால், உங்களுக்கு எதிர்பாராத ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன.

நீங்கள் அருணலு கணக்கு வைத்திருக்கும் கொமர்ஷல் வங்கி கிளைக்கு பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் சென்று பெறுமதிமிக்க பணப்பரிசுகளை தட்டிக்கொள்ளுங்கள். நீங்கள் உங்களுடைய பிள்ளைக்கு அருணலு கணக்கு திறந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடையவில்லையா?

கொமர்ஷல் வங்கியின் அருணலு - ஒளிமயமான எதிர்காலத்தை புலமைப்பரிசு பெறும் செல்வங்களுக்கு வழங்குகிறது.

கொமர்ஷல் வங்கி

உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

அழகும், கலைத்துவமும் மிக்க நவீன முறையிலான நம்பகமான இடம்

சுரபி பதிப்பகம்

பத்திரிகைகள், விழா மலர்கள், சஞ்சிகைகள், சுவரொட்டிகள், பிரசுரங்கள், அழைப்பிதழ்கள் அனைத்தையும் உங்கள் மனநிறைவுக்கேற்ப அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

சுரபி பதிப்பகம்

267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 222 5107





பலாலியில் விசேட தரைப்படைப் பயிற்சியை முடித்துக்கொண்ட படையினருக்கான சான்றிதழ்களை யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால வழங்குவதையும், பயிற்சிபெற்ற படையினரின் அணிவகுப்பை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# போர்நிறுத்த உடன்படிக்கையை புதிய கூட்டணி மீளாய்வு செய்யும்!

## ஜே.வி.பி பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்றுக்கொளளத்தக்கதொன்றல்ல. இந்த உடன்படிக்கை ஜே.வி.பிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தைக் கட்டுப்படுத்தாது.

புலிகளுடன் போர்நிறுத்தம் தொடர்பான புதிய உடன்பாடு செய்துகொள்ளப்படவேண்டும் என்று - ஜே.வி.பியின உத்தியோகபூர்வ பத்திரிகையான லங்காவுக்கு வழங்கிய பேட்டியில் - ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

விமல் வீரவன்ச இந்தப் பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது -

ஜே.வி.பி. எப்பொழுதுமே முற்றுமுழுதாக புரிந்துணர்வு உடன்படிக்கையை நிராகரித்துவந்துள்ளது. ஏனெனில, புரிந்துணர்வு உடன்படிக்கை தேசிய பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடியது என்பது வெளிப்படையாகும்.

சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி கூட்டமைப்புக்கு ஊடாக, சுதந்திரக் கட்சியுடன் புலிகளுடனான புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக ஜே.வி.பி ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ரகசியமாகச் செய்துகொண்ட இந்த உடன்படிக்கையை முன்னெடுத்துச்செல்லவேண்டுமென நாம் நினைக்கவில்லை.



நியாயமான நிபந்தனைகளின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையினை நடத்தக்கூடிய வாய்ப்பைப் பயன்படுத்தி பேச்சுவார்த்தை நடத்துவது என்று சுதந்திரக்கட்சி-ஜே.வி.பி. உடன்படிக்கைக் கூடாகத் தெரிவித்தோம்.

எனவே தேசிய பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையிலான போர்நிறுத்த உடன்படிக்கை ஒன்றை வரைந்து நடைமுறைப்படுத்துவதுபற்றி ஏற்கனவே கவனம் செலுத்தியுள்ளோம்.

இதேவேளை, ஜே.வி.பி 1987 - 89 காலகட்டத்தில் மேற்கொண்ட நிலைப்பாட்டிலிருந்து மாறுபடவில்லை. ஜே.வி.பி மாகாணசபை அமைப்புமுறையை நிராகரிக்கும் நிலைப்பாடு தொடர்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படையாகவே கூறியுள்ளது.

ஆனால், சுதந்திரக்கட்சியின் நிலைப்பாடு மாறுபட்டதாகும். அந்தவகையில் மாகாணசபைமுறை உட்பட அனைத்து விடயங்கள் குறித்து இருதரப்பும் உடன்படிக்கைக்கேற்ப தீர்வுகாண்பதென உடன்பாடு காணப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசியலமைப்புக்கு முரணான செயற்பாடுகள் அரசாங்க அலுவலகங்களில் தொடர்கின்றன!

## சிறிலங்கா சுதந்திரக்கட்சி குற்றச்சாட்டு

அரசாங்கம் கலைக்கப்பட்ட பின்னர் பல அரசஅலுவலகங்களில் அரசியல் சாசனத்திற்கு முரணானவகையில் செயற்பாடுகள் நடைபெற்று வருவதாகத் தகவல் கிடைத்துள்ளதாக சிறீலங்கா சுதந்திரக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

சமுர்த்தி அதிகார சபை, இலங்கை தேயிலை சபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, மினரல் சான்ட்ஸ் கம்பனி, ஜனவசம மற்றும் புனர்வாழ்வு அமைச்சு ஆகிய இடங்களிலேயே இந்த சட்டவிரோத நடவடிக்கைகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊழல்கள் மற்றும் மோசடிகளில் ஈடுபட்டதற்கான பதிவுகள் அடங்கிய ஆவணங்கள் மற்றும் தகுதியில்லாதவர்களுக்கான பொருத்தமற்ற சம்பளக் கொடுப்பனவு ஆவணங்கள் என்பனவே அரசஅலுவலகங்களில் இருந்து காணாமற்போயுள்ளன.

எனவே, இது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கெதிராக அமைச்சுக்களின் செயலாளர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென சுதந்திரக்கட்சி கோரியுள்ளது.

இதேவேளை, அமைச்சின் செயலாளர்கள் இதுதொடர்பாக உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியின் செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

இது தொடர்பான நடவடிக்கையில ஈடுபடுபவர்களுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி விரைவில் கடுமையான நடவடிக்கை எடுக்குமெனவும் கூட்டு முன்னணி தெரிவித்துள்ளது.

# ஐ.தே.முன்னணி போன்று ஊழல் அரசு இதற்குமுன் வேறெங்கும் இருந்ததில்லை

## பொ.ஐ.மு முன்னாள் எம்.பி. குற்றச்சாட்டு

ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தைப்போன்று ஊழல்மிக்க அரசாங்கம் இலங்கை வரலாற்றில் மட்டுமல்ல, உலகில்கூட இருந்ததில்லை.

இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான மகிந்தானந்த அளுத்கமகே - கம்பஹாவில் இடம்பெற்ற கருத்தரங்கில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது

எதிர்காலத்தில் ஊழலற்ற அரசாங்கம் ஒன்று அமையவேண்டும்.

ஜககிய தேசிய முன்னணி போன்ற ஊழல்மிக்க அரசாங்கமும், ஊழல் அமைச்சரவையும் இலங்கையில் மட்டுமல்ல உலகின் வேறெங்கிலும் காணப்பட்டதில்லை.

உலகின் ஏழு அதிசயங்களுடன் எட்டாவது அதிசயமாக இதனைச் சேர்க்கமுடியும். ஏப்ரல் மாதத்தில் அமைக்கும் ஆட்சியிலும் எமது அமைச்சர்கள் இவ்வாறு நடக்கமுற்பட்டால் பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து முதலில் வெளியேறும் பின்வரிசை உறுப்பினர்கள் நாமாகத்தான் இருப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இனவிகிதாசாரத்துக்கேற்ப படைகளை சீராக்கவேண்டும்!

## சர்வதேச சமஷ்டி அமைப்பு பணிப்பாளர்

சமஷ்டி அமைப்பைக்கொண்ட ஒரு நாட்டில், ஒரே இராணுவமே இருககும். இலங்கையின் இனப்பிரச்சினைக்குத்தீர்வாக சமஷ்டி அமைப்பு ஏற்றுக்கொள்ளப்படின், குறைந்தபட்சம் இனவிகிதாசாரத்திற்கேற்ப படையினரின் எண்ணிக்கை சீராக்கப்படவேண்டும் என்று சர்வதேச சமஷ்டி அமைப்பின் பணிப்பாளர் கால் ரொகன்பே தெரிவித்தார்.

கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம், மாற்றுக்கொள்கைளுக்கான நிலையம் என்பன ஒட்டாவா சமஷ்டி ஸ்தாபன சம்மேளனத்தின் அனுசரணையுடன் நடத்திய கருத்தரங்கில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சமஷ்டி முறை என்பது அதிகாரங்களைப் பகிர்வதாகும். அந்தமுறை இலங்கையின் இனப்பிரச்சனைக்கு பரிகாரமாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தர்.

# நாட்டின் ஐக்கியமும், பாதுகாப்பும் மக்கள் ஆணையில் தங்கியுள்ளது

## அநுரா பண்டாரநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

நாட்டின் ஐக்கியம், பாதுகாப்பு என்பன எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்கள் அளிக்கும் ஆணையில்தான் தங்கியுள்ளது என்று ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

நிட்டம்புவவில் இடம்பெற்ற வைபவம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய தேசிய முன்னணி 2001 ஆம் ஆண்டில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டது. ஐக்கிய தேசிய முன்னணி மக்களுக்குத் தெரியாமலேயே நாட்டைப் பிளவுபடுத்துவதற்கான திட்டம் ஒன்றில் ஈடுபட்டது. தற்போது மக்கள் சக்தி தெளிவான பாதையில் செல்கிறது.

சகல தேசாபிமான சக்திகளும், முற்போக்குக் கட்சிகளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியுடன் அணிதிரள்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.





வவுனியாவில் கண்ணிவெடியகற்றும் பயிற்சிபெற்ற குழுவினருக்கு - பொலிஸ் அத்தியட்சகர் சான்றிதழ் வழங்குவதையும், பயிற்சிபெற்றோரின் அணிவகுப்பையும் படங்களில் காணலாம்.

# அம்பாறை உள்ளூராட்சி தேர்தல் மீண்டும் ஒத்திவைக்கப்படலாம்!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை நகரசபை மற்றும் ஆறு பிரதேச சபைகளுக்கு எதிர்வரும் 21 ஆம் திகதி நடத்தப்படவிருக்கும் தேரத்ல் பெரும்பாலும் பிற்போடப்படலாம் எனத் தேர்தல் திணைக்கள வட்டாரங்களை மேற்கோள்காட்டும் செய்திகள் தெரிவித்தன.

2000 ஆம் ஆண்டு தேர்தல் இடாப்பின்படி இந்தத் தேர்தல் நடத்தப்படுவதனால் - புதிதாக வாக்காளர்களாகப் பதிவுசெய்த 11 ஆயிரம் பேர் இந்தத் தேரதலில் வாக்களிக்க முடியாததைச் சுட்டிக்காட்டி-உயர்நதிமன்றம் அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதனால் 2002 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின்படி தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று இந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

இதனையடுத்து உயர் நீதிமன்றம் - தேர்தல் ஆணையாளரும், அம்பாறை தெரிவத்தாட்சி அலுவலரும் எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் உயர்நீதிமன்றில் ஆஜராகி 2002 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் அடிப்படையியில் அம்பாறையில் தேர்தல் நடத்தமுடியுமா என்பதுபற்றி விசாரிக்கவேண்டும் என உத்தரவிட்டிருந்தது.

எதிர்வரும் 21 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருப்பதால புதிய வாக்காளர்களுக்கான வாக்காளர் அட்டைகளை அச்சிட்டு உரியவர்களுக்கு விநியோகிக்க குறுகிய கால அவகாசமே இருக்கிறது. இதனால் பெரும்பாலும் இந்தத் தேர்தல் பிற்போடப்படலாம் எனத் தெரியவருகிறது.

### வடமராட்சி கிழக்குக்குத் தொலைத்தொடர்பு வசதி

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைப்பு நிறுவனம் வடமராட்சி கிழக்கு மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் முகமாக தொலைத்தொடர்பு சேவைகளையும், தொலைநகல் சேவைகளையும் நிழற்பிரதியும் கணினிச் சேவைகளும் நேற்றுமுதல் அரம்பிக்கப்பட்டுள்ளது. (17)

# பாகிஸ்தானுக்கான பயணம் சவாலாகவே இருக்கும்

## இந்திய அணி வீரர்கள் கருத்து



இந்திய கிரிக்கெட் அணி 15 வருடங்களுக்குப் பிறகு பாகிஸ்தான்சென்று விளையாடவுள்ளது. பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆய்வுகளும் நடந்துவருகிறது. இந்தநிலையில் பாகிஸ்தான் சென்று விளையாடுவது குறித்து இந்திய கப்டன் கங்கூலி, துணைக் கப்டன் ராகுல் டிராவிட், லக்ஷ்மன், அனில் கும்ளே ஆகியோர் தங்களது கருத்துக்களை கூறியுள்ளனர். அவர்கள் கூறியுள்ளதாவது:-

**கங்கூலி:-**

பாகிஸ்தான் சென்று விளையாட வேண்டும் என்று முடிவு எடுத்தால் அங்கு சென்றுதான் ஆகவேண்டும். பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் செய்யமாட்டோம் என்று நாங்கள் ஒருபோதும் கூறியது இல்லை. கிரிக்கெட் சபை மற்றும் அரசு என்ன முடிவு எடுக்கிறதோ அதற்கு கட்டுப்பட்டுச் செயற்படுவோம்.

**ராகுல்டிராவிட்:-**

பாகிஸ்தான் சுற்றுப்பயணம் கடினமாகத்தான் இருக்கும். அதில் சந்தேகமும் இல்லை. எங்கள் எல்லோருக்கும் அதிகபட்ச பாதுகாப்பு கொடுத்தாக வேண்டும். பாதுகாப்புத் துறையில் சிறந்த நிபுணர்களை பணியில் அமர்த்தியாக வேண்டும்.

**வி.வி.எஸ்.லக்ஷ்மன்:-**

பாகிஸ்தான் சுற்றுப்பயணம் எங்களுக்கு ஒரு சவாலாக இருக்கும். இது ஒரு சரியான போட்டியாகவும் இருக்கும். பாகிஸ்தான் சென்று நமது திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்பை எதிர்பார்த்து காத்திருக்கிறோம். ஆனால், பாதுகாப்புத்தான் கவலையளிப்பதாக இருக்கிறது.

**அனில் கும்ளே:-**

நான் இதுவரை பாகிஸ்தான் சென்றதே இல்லை. அங்கு என்ன நடக்கும் என்றெல்லாம் எனக்கு எதுவும் தெரியாது. ஆனால், இந்த சுற்றுப்பயணம் மிக துணிச்சல் மிக்கதாகவும், கடினமானதாகவும் இருக்கும். நமது வீரர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பது மிக முக்கியமானது.

இந்தியா, பாகிஸ்தான்சென்று விளையாடவுள்ளது. இதற்காக பாகிஸ்தானின் கராச்சி நகரிலுள்ள கிரிக்கெட் மைதானம் தயாராகி வரும் காட்சி.

# பாகிஸ்தான் செல்லாதது வருத்தம் அளிக்கின்றது!

## ஹர்பஜன் சிங் தெரிவிப்பு

இந்திய அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவரான ஹர்பஜன்சிங் அவுஸ்ரேலிய சுற்றுப்பயணத்தின்போது, முதல் டெஸ்டில் காயமடைந்தார். இதனால் அவர் தொடர்ந்து விளையாடமுடியாமல் போனது.

இந்திய அணி 15 வருடங்களுக்குப் பிறகு பாகிஸ்தான் சென்று விளையாடவுள்ளது. ஹர்பஜன் சிங் இன்னும் முழு உடல்தகுதி பெறாததால் பாகிஸ்தான் பயணத்தில் இடம் பெறமாட்டார் என உடற்பயிற்சியாளர் லிப்ஸ் ஏற்கனவே தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், ஹர்பஜன்சிங் - மத்திய அரசு பாகிஸ்தான் சென்று விளையாட அனுமதித்தது வரவேற்கத்தக்கதாகும் எனக் கூறினார்.

இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க பயணத்தில் நான் விளையாடாதது எனக்கு மிகுந்த வருத்தத்தையளிக்கிறது.

இது இரு நாடுகளுக்கிடையே புதிய உறவை ஏற்படுத்தியுள்ளது. எனினும், இனி வரும் ஆண்டுகளில் பாகிஸதானில் இந்திய அணி சுற்றுப்பயணம் செய்யும்போது, அதில் கட்டாயமாக நான் விளையாடுவேன். இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

## ஆபிரிக்க கிண்ணத்தை துனிசியா கைப்பற்றியது!

ஆபிரிக்க கிண்ணத்துக்கான உதைப்பந்தாட்டப் போட்டி துனிசியாவில் நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டியில் துனிசியா மற்றும் மொராக்கோ அணிகள் மோதின.

ஆட்டம் தொடங்கி 5 ஆவது நிமிடத்திலேயே துனிசியா வீரர் சில்வாதாஸ் ஒரு கோலும் 53 ஆவது நிமிடத்தில் சையித் ஜாசிரி ஒரு கோலும் அடித்தனர். முடிவில் துனிசியா 2 - 1 என்ற கோல் கணக்கில் மொராக்கோவை தோற்கடித்து சம்பியன் பட்டம் வென்றது.

# விளையாட்டு

# மென்பந்து கிரிக்கெட் போட்டி அரையிறுதி ஆட்டம் இன்று!

இணுவில் இந்து விளையாட்டுக் கழக 46 ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ். மாவட்ட விளையாட்டுத் துறையின் அனுசரணையோடு நடைபெற்றுவரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இணுவில் மத்திய கல்லரி விளையாட்டு மைதானத்தில் மாலை மூன்று மணிக்கு நடைபெறவுள்ள இந்தச் சுற்றுப் போட்டியில் பெசன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சிறிமுருகன் விளையாட்டுக் கழகமும், உடுவில் மத்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நொதேன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

இந்தப் போட்டியில் வெற்றிபெறும் இரு அணிகளும் இறுதிப் போட்டியில் மோதவுள்ளன. இறுதிப்போட்டிகள் எதிர்வரும் புதன் கிழமை காலை 9 மணியளவில் நடைபெறுமென இந்து விளையாட்டுக்கழக கிரிக்கெட் துறை பொறுப்பாளர் பா.கிரிபரன் தெரிவித்தார். (94)

# கரவெட்டி கல்விக் கோட்டமட்ட வலைப்பந்தாட்டப் போட்டி

கரவெட்டி கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான வலைப்பந்தாட்டப் போட்டியில் நாளை காலை 8.00 மணிக்கு 15 வயது ‘ஏ’ பிரிவில் கம்பர்மலை அ.த.க. பாடசாலையை எதிர்த்து உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியை எதிர்த்து வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியும்-

15 வயதுப் ‘பி’ பிரிவில் யா/வல்வெட்டி இ.த.க பாடசாலையை எதிர்த்து இமையாணன் அ.த.க பாடசாலையும், கரணவாய் பொன்னம்பலம் வித்தியாசாலையை எதிர்த்து கரவெட்டி ஞானசாரியார் கல்லூரியும் மோதவுள்ளன.

17 வயது ‘ஏ’ பிரிவில் கரவெட்டி ஞானசாரியார் கல்லூரியை எதிர்த்து கரணவாய் மகா வித்தியாலயமும், வல்வெட்டி இ.த.க. பாடசாலையை எதிர்த்து கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரியும் மோதவுள்ளன.

பி.ப 2 மணிக்கு 17 வயது ‘பி’ பிரிவில் இமையாணன் அ.த.க. பாடசாலையை எதிர்த்து கம்பர்மலை அ.த.க. பாடசாலையும், வடமராட்சி மத்திய கல்லூரியை எதிர்த்து உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும்

19 வயது ‘ஏ’ பிரிவில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியை எதிர்த்து உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் 19 வயதுப் பிரிவில் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியை எதிர்த்து கரவெட்டி விக்கினேஸவராக் கல்லூரியும் மோதவுள்ளன. (12)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

செம்பியன்பற்று றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை பி.ப. 2 மணியளவில் சென்.பிலிப்ஸ் நேரிஸ் வி.க. மைதானத்தில் அதிபர் சி.ஜெயந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக மருதங்கேணி கோட்டக் கல்வி அலுவலர் பா.இரகுநாதன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக வண. பிதா ம.பிரான்சிஸ் அடிகளாரும் கௌரவ விருந்தினராக வடமராட்சிக் கல்விக்கழகப் பொறுப்பாளர் சி.தாயகனும் கலந்துகொள்ளவுள்ளனர். (17)

(அராலி)

அராலி இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வே.மோகனநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதனும் ந.யோகேந்திராஜாவும் வலிகாம வலய ஆசிரிய ஆலோசகர் நா.அரியபுத்திரனும் கலந்துகொள்ளவுள்ளனர். (118)



# அரசின் அட்டூழியத்துக்கு எதிராக போராடும் புலிகளை ஆதரிக்கிறேன்!

## செய்தியாளர்களிடம் வைகோ பேட்டி

தடைசெய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசுவது குற்றமல்ல என்று அறிவித்தது இதை என் அரசியல் வாழ்வில் நான் அடைந்த மிகப் பெரிய சாதனையாக கருதுகின்றேன்

கட்சியின் பொதுக்குழுவை நேற்றுக் கூட்டிய வைகோ கூட்டத்திற்குப் பின் நிருபர்களிடம் பேசியுதாவது -

தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசின் அடடூழியங்களுக்கு எதிராகப் போராடும் இயக்கங்களில் - முன்னணியில் இருப்பது விடுதலைப் புலிகள் இயக்கம்தான். இலங்கை மண்ணில் அவர்களை நான் ஆதரிக்கின்றேன். இலங்கைத் தமிழர்களின் ஒரே பிரதிநிதி விடுதலைப் புலிகள்தான் என்பதை முழு உலகமுமே ஒத்துக்கொண்டுவிட்டது. அமைதிப் பேச்சுவார்த்தையை ஆதரித்து கருத்து தெரிவித்த பிரதமர் வாஜ்பாய் கூட இதனை ஒப்புக்கொண்டார். ஒரு நாட்டின் பிரதமரே சொன்னதை நாட்டின் சாதாரண குடிமகனான நான் சொல்வதில் என்ன தவறு இருக்கிறது.

இலங்கை நாடாளுமன்றத்தைக் கலைத்ததும், மக்கள் விடுதலை முன்னணி என்ற இனவாதக் கட்சியுடன் கூட்டணி அமைத்ததும் ஜனாதிபதி சந்திரிகா செய்துள்ள மிகப்பெரிய தவறுகள். இதனால், இலங்கையில் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

என்னை ஜோர்ஜ் பெர்னாண்டஸ் சந்தித்தது தனிப்பட்ட முறையில்தான். இதில் அரசியல் முக்கியத்துவம் ஏதுமில்லை என்றார்.

எங்களது திராவிட இயக்கத்தின் தனித் தனமையை கட்டிக்காத்திடுவது என்று, பொதுக் குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆட்சியில் பங்கெடுத்தால் எங்களது முக்கிய நோக்கான திராவிட இயக்க வளர்ச்சியில் கவனம் செலுத்த முடியாது.

இதனால், மத்தியில் எந்த அரசிலும் சேர்வதில்லை என்று முடிவெடுத்துள்ளோம். வரும் மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் கட்சியின் வேட்பாளர்கள் பட்டியல் 19 ஆம் திகதி சென்னையில் நடக்கவுள்ள பொதுக் கூட்டத்தில் அறிவிக்கப்படும். எங்கள் கூட்டணி வென்றால், சோனியாகாந்தியை பிரதமராக ஏற்போம். அவர் வெளிநாட்டுக்காரர் என்ற வாதம் குறித்து முடிவுசெய்யவேண்டியது மக்கள்தான். கட்சிகள் அல்ல.

பா.ஜ.கவுடன் எங்களுக்குப் பல்வேறு கொள்கை வேறுபாடுகள் இருந்த போதிலும், அநதக் கட்சியுடன் கூட்டணி அமைத்தோம். காங்கிரசுடன் எங்களுக்கு வேறுபாடுகள் கிடையாது. இதனால், காங்கிரசுடன் கூட்டணி என்பது எங்களுக்குப் பிரச்சினையாக இல்லை.

பொடாவுக்கு ஆதரவாக நான் நாடாளுமன்றத்தில் வாக்களித்தது நான்செய்த மிகப் பெரியதவறு. பொடாவின் ஒவ்வொரு பிரிவையும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கூடடத்தில் நான் எதிர்த்தேன். ஆனால், கூட்டணியின் தர்மத்துக்காக அதை ஆதரித்து வாக்களித்தேன்.

காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தால் உடனடியாக பொடா சட்டம் நீக்கப்படும். சிறையில் அடைபட்டாலும் என் போராட்டத்தை நான் கைவிடவில்லை. பேச்சுரிமையை எதிர்க்கும் பொடாவின் 21 ஆவது பிரிவை எதிர்த்து நான் தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் சாதகமான பதில் தந்தது. முன்னதாக வைகோவை மீண்டும் பொதுச்செயலாளராகவும், எல்.கணேசனை மீண்டும் அவைத் தலைவராகவும் மு.கண்ணப்பனை மீண்டும் பொருளாளராகவும் ம.தி.மு.க. பொதுக்குழு தேர்வுசெய்தது.

கட்சியின் துணைப் பொதுச்செயலாளர்களாக செஞ்சி ராமச்சந்திரன், நாசரேத்துரை, சத்யா ஆகியோர் தேர்வுசெய்யப்பட்டனர். 7 பேர் கொண்ட நாடாளுமன்ற விவகாரக்குழுவும் அமைக்கப்பட்டது.

கட்சியின் தேர்தல் அறிக்கையை தயார் செய்ய திருப்பூர் துரைராஜ், டாக்டர் சந்திரசேகரன், வீர இளவரசன், டாக்டர் சபாபதி மோகன், குலோத்துங்கன் ஆகியோர் கொண்ட குழுவும் அமைக்கப்பட்டது.

ஜனநாயக முற்போக்கு கூட்டணியில் ம.தி.மு.கவுக்கு சிவகாசி, வந்தவாசி, திருச்சி, பொள்ளாச்சி ஆகிய தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தத் தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் பாட்டியலை 19 ஆம் திகதி வைகோ அறிவிக்கவுள்ளார்.

## சோனியா - சிதம்பரம் புதுடெல்கியில் சந்திப்பு

(டெல்கி)

முன்னாள் மத்திய நிதி அமைச்சரும், தமிழ் மாநில காங்கிரசை நிறுவியவருமான ப.சிதம்பரம் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை நேற்றுக் காலை சந்தித்துப் பேசினார். சந்திப்பின்போது, தமிழகத்தில் தி.மு.க - காங்கிரஸ் கூட்டணி குறித்தும், மற்ற கட்சிகளின் அரசியல் நடவடிக்கைகள் குறித்தும் விவாதித்தனர்.

## சாவகச்சேரி நகரசபையின்

# விளையாட்டு மைதானம் மீளளிக்கும் நிகழ்வை படையினர் தற்காலிகமாக கைவிட்டனர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் பொது விளையாட்டு மைதானத்தை மீளக் கையளிக்கும் நிகழ்வைப் படைத் தரப்பு தற்காலிகமாக கைவிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

சாவகச்சேரி நகர்ப்பகுதியின் தெற்குப் புறமாக அமைந்துள்ள இந்த விளையாட்டு மைதானத்தைக் கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக படையினர் பயன்படுத்தி வருகின்றனர்.

அத்துடன், குறித்த பகுதியை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியுள்ள படைத்தரப்பு, பொதுமக்களது பாவனைக்கு அதனை தடைசெய்துள்ளது. இந்த நிலையில் ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் முக்கியஸ்தர்களும், யாழ். மாவட்ட படைத்தலைமைக்குமிடையே இடம்பெற்ற பேச்சுக்களை அடுத்து, இந்த விளையாட்டு மைதானத்தை விடுவிக்க படைத்தலைமை முன்வந்திருந்தது.

இதற்கேதுவாக, அந்தப்பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றிப் புனரமைத்து வழங்க படையினர் கடந்த சில தினங்களாக நடவடிக்கைகளை எடுத்திருந்தனர்.

எனினும், தற்போது குறித்த பொது விளையாட்டு மைதானத்தை விடுவிக்கும் நிகழ்வைப் படைத்தலைமை கைவிட்டிருப்பதாக தெரியவருகின்றது.

குறிப்பாக தேர்தலொன்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வாறான விடுவிப்புக்கள் இடம்பெறுகின்றமை தொடர்பாக தென்னிலங்கை ஊடகங்கள் பலவும் சர்ச்சைக்குரிய வகையில் செய்திகளை வெளியிட்டு வருவதால், அவ்வாறான சர்ச்சைகளினுள் சிக்கிக்கொள்வதிலிருந்து தப்பித்துக் கொள்ளவே யாழ்.படைத்தலைமை இவ்வாறானதோர் முடிவிற்கு வந்திருக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.



அனுராதபுரம் விவேகானந்த சபையினரின் முயற்சியால் - நீராவியடியில் ஒரு பாலர் அறநெறிப் பாடசாலைக் கட்டடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழாவில் - கிரியைகளில் பங்குகொண்டோரையும், அடிக்கல் நாட்டிய எஸ்.எம்.தோறதெனிய கிராமசேவையாளர் ஹரிசன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நானகாவது அகவையில்;



பெயர் : நி.நிருஷா
முகவரி : இல.1 மருதடி வீதி. யாழ்ப்பாணம்.


# யாழ்.அரியாலைப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலை, ஸ்ரான்லிக் கல்லூரிக்கு முன்பாகவுள்ள கடை ஒன்று உடைக்கப்பட்டு, அங்குள்ள பெறுமதியான பொருட்கள் திருடிச்செல்லப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை அதிகாலை இடம்பெற்ற இந்தத் திருட்டுச் சம்பவத்தில், ஜெயசீலன் என்பவரது பலசரக்குக் கடையே திருடர்களினால் - முன்புறக் கதவு உடைக்கப்பட்டு - அங்குள்ள சவர்க்கார வகைகள், பால்மா வகைகள், பாடசாலை உபகரணங்கள், பிடிக்கட்டுக்கள், சோடா வகைகள், மற்றும் ஒரு தொகைப் பணம் உட்பட பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாகப் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

இதேவேளை, நாயன்மார்க்கட்டு குளத்தருகே, வீதியால் சென்றுகொண்டிருந்த இரு பெண்களைக் கத்தி முனையில் பயமுறுத்தி நகைகளை அபகரிக்க முனைந்த திருடர்கள் எடுத்த முயற்சி - அந்த யுவதிகள் கூக்குரலிடவே தம் முயற்சியைக் கைவிட்டுத் தப்பியோடிவிட்டனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்னரும் அரியாலை ஸ்ரான்லிக் கல்லூரிக்கு முன்பாகவுள்ள வீடு ஒன்று உடைக்கப்பட்டு, அங்குள்ள பெறுமதியான பொருட்கள் திருடிச்செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (55)



'ஞானசுடர்' 7 ஆம் ஆண்டு வெளியீட்டு விழாவில் - ஞானசுடர் சஞ்சிகைக்கு தொடர்ந்தும் ஆக்கம் எழுதி வரும் இளம் எழுத்தாளர் மாலினி குணரத்தினத்திற்கு - நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் சிவநாதன் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (17)

# தீவக - வலிகாம இணைப்புக்கு பாதை அமைக்கக் கோரிக்கை

(வண்ணை)

தீவகப் பிரதேசத்தை வலிகாமத்துடன் இணைக்கும் வகையில் அராலித்துறையூடாக பாதை அமைக்குமாறு அந்தப் பகுதி மக்கள் - தீவக தேசிய எழுச்சிப் பேரவையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது பாவனையிலுள்ள பண்ணைப் பாலம் மிகவும் ஆபத்தான நிலையில் எந்நேரமும் உடையக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும், இதனால் தாம் பாரிய நெருக்கடியை எதிர்நோக்க வேண்டிவரும் எனவும் அவர்கள் தமது கோரிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளனர். (111)

# குடாநாட்டில் கடந்த மாதம் மட்டும் 15 இற்கும் மேற்பட்ட தற்கொலைகள்

இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் மட்டும் சுமார் பதினைந்திற்கும் மேற்பட்ட தற்கொலைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

தற்கொலை செய்தவர்களின் தொகை கடந்த சில மாதங்களை விட தற்போது அதிகரித்துள்ளது.

அநேகமான தற்கொலைகள் குடும்பத்தகராறு காரணமாகவே இடம் பெற்றுள்ளன. இதைவிட வாழ்க்கையில் விரக்தி, காதல் போன்ற காரணங்களினாலும் ஏற்பட்டுள்ளன. அநேகமான தற்கொலைகள் தூக்கிட்டு மரணமடைந்ததாக மருத்துவக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன எனத் தெரிவித்தனர்.

# பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் பொலித்தீன் பாவனைக்குத் தடை

பச்சிலைப்பள்ளி பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில் இன்று முதல் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாகப் பிரதேசசபை - சகல உணவகங்களுக்கும் கடித மூலம் அறிவித்துள்ளது. லஞ் சீற்றுக்கு மாற்றாக வாழையிலை, தாமரை இலை முதலியவற்றை பாவிக்குமாறும், கொதித்த நீரினால் பாத்திரங்களைக் கழுவிப் பாவிக்குமாறும், கொதிக்கவைத்து ஆறிய நீரை குடிப்பதற்கு கொடுக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மார்ச் 1 ஆம் திகதி முதல் லஞ் சீற்றை முற்றாகத் தடைசெய்யும்படி பிரதேசசபை செயலாளர் இ.து.சிவராசா கேட்டுள்ளார். (17)

## பருத்தித்துறை சுகாதார அதிகாரி பிரிவு

# தாய்-சேய் நிலையங்களுக்கு கோன் சோயா பைக்கற்றுக்கள்

(யாழ்ப்பாணம்)

தாய்-சேய் சிகிச்சை நிலையங்களுக்கான சத்துணவு வழங்கும் திட்டத்திற்கமைவாக - பருத்தித்துறை சுகாதார அதிகாரியின் கீழ்வரும் சகல தாய் - சேய் நிலையங்களுக்கும் கோன் சோயா பைக்கற்றுக்கள் கிடைக்கவிருக்கின்றன.

பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரிடமிருந்து 30 சிறிய பைக்கற்றுக்கள் கொண்ட பொதிகள் 388 பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனைக்கு அனுப்பிவைக்கபட்டுள்ளன.

இந்த பொதிகள் யாவையும் உரியவர்களுக்கு விநியோகிக்கும் பொருட்டு, பருத்தித்துறை சுகாதார அதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார். அநேகமாக அடுத்த வாரம் எல்லோருக்கும் கோன் சோயா பைக்கற்றுக்கள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. நீண்ட நாட்களுக்குப் பிறகு சோயா பைக்கற் விநியோகம் செய்யவிருப்பது குறிப்பிடத்தக்கது.(13)

# சின்னஞ்சிறு செய்திகள்

## திருக்கேதீஸ்வரத்துக்கு விசேட பஸ் சேவை

எதிர்வரும் 18 ஆம் திகதி மகா சிவராத்திரி உற்சவத்தை முன்னிட்டு - வ.பி.போ.சபையால் திருக்கேதீஸ்வரத்துக்குப் பேருந்துச் சேவைகள் நடாத்தப்படும். நாளை காலை 8 மணிமுதல் 12 மணிவரை வ.பி.போ.சபை பேருந்துக்கள் - யாழ். பேருநது நிலையத்திலிருந்து சேவையாற்றவுள்ளன.

## அரசமரம் அகற்றப்பட்டது

பலாலி வீதி ஆலடிச்சந்தியில் போராளிகளின் நினைவிடத்தில் கடந்தசில மாதமாகச் சீருடையினர் அரச மரம் ஒன்றை நாட்டி வளர்த்து வந்தனர்.

இது குறித்து அந்தப் பகுதி பொது அமைப்புக்கள் எதிர்ப்புக் காட்ட ஆரம்பித்துள்ளதையடுத்து, அரசமரம் அகற்றப்பட்டுள்ளது. இதற்கு எதிரே படையினரின் காவலரண அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (111)

## அரச செயலக அலுவலர்கள் சிலருக்கு இடமாற்றம்

இதுவரை காலமும் சங்கானை பிரதேச செயலகத்தில் நிதியுதவியாளராகக் கடமையாற்றிய ஸ்ரீ ஜெகநாதன் - கடந்த 11 ஆம் திகதி முதல் யாழ்.மாவட்டச் செயலக நிதிக் கிளை பிரதம எழுதுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நிதிக்கிளையின் பிரதம எழுதுநராகக் கடமையாற்றிய எஸ்.தேவராஜா - பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றதை அடுத்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை மாவட்டச் செயலக நிதிக்கிளையில் கடமையாற்றிய செ.சுதாகரன் - சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.(24)

## தராசுகளுக்கு முத்திரையிடல்

நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் இயங்கும் ப.நோ.கூ. சங்கங்கள், சந்தைகள், வியாபார நிலையங்களில் பாவனையிலுள்ள தராசுப் படிகளுக்கு முத்திரையிடும் வேலைகள் கீழ்க்காணும் திகதிகளில் நல்லூர் பிரதேச சபையின் தலைமைக்காரியாலயத்தில் 16,17,20,23, 24,26,27 ஆகிய திகதிகளில் காலை 9 மணிமுதல் பி.ப. 1.30 மணிவரை நடைபெறும்.

## பொதுசன மாதாந்த உதவிப் பணம் வழங்கப்படுகிறது

தென்மராட்சி பிரதேச செயலகத்தின்மூலம் - பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோரது பெப்ரவரிமாத கொடுப்பனவுகள் - சம்பந்தப்பட்ட தபாலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், உரியவர்கள் இன்றுமுதல் தமது கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் தென்மராட்சிப் பிரதேச செயலக சமூகசேவைப் பகுதியினர் தெரிவித்தனர். (24)

## தையல் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யா.சென் ஆன்ஸ் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையின் முறைசாராப் பிரிவினரால் நடாத்தப்படும் தையல் பயிற்சிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சிநெறிக்குக் குறிப்பிட்ட பாடசாலையின் பழைய மாணவர்கள் அனைவரும் விண்ணப்பிக்கமுடியும் எனத் தெரிவிக்கப்படுவதுடன், விண்ணப்பப்படிவங்களை உடனடியாகப் பாடசாலை அதிபரிடம் சமரப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (44)

## சிறுவர் நலன்காக்கும் திட்டம்

வடக்கு - கிழக்கில் போரினால் பதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான நலன்காக்கும் திட்டமொன்றை- தமிழர் புனர்வாழ்வு கழகமும், யுனிசெப் நிறுவனமும் இணைந்து நடைமுறைப்படுத்தி வருகின்றன.

இதன் முதற்கட்டமாக - கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் ஆதரவுடன் - பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கான செயற்திட்டம் சம்மந்தமாக விழிப்புணர்வு பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டது.(17)

## சமுர்த்தி செயலணி அங்குரார்ப்பணக் கூட்டம்

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு ஜே-313 கிராம அலுவலர் பிரிவுக்கான சமுர்த்தி செயலணி அங்குரார்ப்பணக் கூட்டம் - நாளை பிற்பகல் 2.30 மணிக்கு மட்டுவில் வடக்கு ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூடடத்தில் அனைத்துப் பொதுமக்களையும் கலந்துகொள்ளுமாறு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.பவளராணி கேட்டுள்ளார். (24)

## கரம்பொன் கிராம வயல்களில் ஆய்வு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதே செயலக புள்ளிவிபர உத்தியோகத்தர் சிவந்தினியால், - கப்பூது கிராம அலுவலர் பிரிவில் கரம்பொன் கிராமத்தில் உள்ள வயல் வெளியில் நெற்பயிர்ச் செய்கை விளைச்சல் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கரவெட்டி பிரதேச செயலர் க.கனகரத்தினம், கப்பூது கிராம அலுவலர் தி.வரதராஜன் ஆகியோரும் இந்த ஆய்வில் கலந்துகொண்டனர். (116)




# சூடாதமலர்(கள்)

அங்கம்-6

பூ.நகுலன்

அவள் தேநீர் தயாரித்துக்கொண்டு வருவதற்கும், ஆசிரியர் அவளுடைய பெற்றோரிடம் தான் வந்த காரியத்தைத்கதைத்து முடிப்பதற்கும் சரியாக இருந்தது. அவளிடம் இருந்து தேநீரை வாங்கியவராக, நன்றி என்ற வார்த்தையை உதிர்த்தவராய் - நீ நன்றாக வாழ்வாய் அம்மா என்று கூறியவண்ணம் தேநீரை உறிஞ்சிக் குடித்தார். தேநீரை ஆசிரியர் குடித்துக்கொண்டிருக்க, பெற்றோர் அவளிடம் ஆசிரியர் சும்மா வரவில்லை என்ற காரணத்தைக் கூறிக்கொண்டிருந்தார்கள். ஆசிரியர் தேநீரை வேண்டும் என்றே மிக மெதுவாக உறிஞ்சி உறிஞ்சி குடிக்கத்தொடங்கினார். ஆசிரியர் தேநீரைக்குடித்து முடித்தகையோடு, 'அப்ப நான் போய் வரப்போறன். நான் குடித்த இந்தத் தேநீர் இனிப்புப் போடப் பட்டதாக இருந்தது. நன்றாகவும் இருந்தது. நான் கனகாலமாய் இனிப்புப் போட்ட தேநீர் குடிக்கவில்லை. ஏன் என்று சொல்லவேண்டிய தேவை இல்லை. என்றாலும் சொல்லுறன்- எனக்கு சலரோகம் இருக்கு. ஆனால், இன்றைக்கு அவள் தந்தாள் என்றதற்காக அவளிடம் தேநீரை வாங்கிக் குடித்துப் போட்டன். முதன்முறை வாரன், இனிப்பாக இருக்கட்டுமே என்றுதான் நான் இப்படிச் செய்தனான். இதனால் எனக்கொரு வித கெடுதலும் ஏற்படாது என்பது என்ர எண்ணம். இப்படிச் சில காரணங்களுக்காக நோய் நொடிகள் எதையும் பார்க்க வேண்டிய தேவை இருக்கக்கூடாது' என்ற வண்ணம் தன்னுடைய கற்பித்தல் அனுபவத்தின் ஊடாகத் தன் கருத்தினையும் அவளிடம் ஊடகமாகத் தெரிவித்தார்.

பெற்றோருக்கோ அளவில்லாத மகிழ்ச்சி. தாம் அவளுக்கு செய்தியைக் கூறப்போய், அவளோடு சண்டைபிடிக்க வேண்டிவருமே என்ற ஆதங்கத்தில் இருந்தவர்கள் - வாழைப்பழத்தில் ஊசி ஏத்திறமாதிரி எப்படித் தன் கருத்தைச் சொல்லிவிட்டிடார் எனற மகிழ்ச்சிதான் அவர்களிடம் ஏற்பட்டது. ஆசிரியர் வருகின்ற வெள்ளிக்கிழமை மீண்டும் வருவதாகக் கூறிச் சென்றார். போகும்போது 'நல்ல முடிவாய்ச் சொல்லுங்கோ. ஒண்டும் அவசரமில்லை. நல்லா யோசித்து நல்ல முடிவு எடுத்தால், எல்லோருக்கும் நல்லது. எனக்கும்தான் கொஞ்சம் சுகர் ஏறும். பரவாயில்லை. மாணவனுக்காக நான் எதையும் செய்யிறன்' என்றவராக



ஆசிரியர் கூறிச்சென்றார்.

ஆசிரியர் போய்விட்டார். மகளிடம் பெற்றோர் கேட்டனர். 'என்னம்மா அவருக்குச் சொல்லுவம்' என்று. அவளும் - 'நானும் யோசிச்சுப் பார்க்கிறன். அவர் சொல்லுறதும் சரிதான் போலகிடக்கு. அம்மா அவர் ஒரு திருக்குறள் சொன்னவரெல்ல. என்ன குறள் அம்மா அது' என்று தன்னுடைய பெற்றோரைக் கேட்டாள். அந்தக் குறளையும் அதன் கருத்தையும் ஆசிரியர் சொன்ன மாதிரியே அவளுடைய தந்தை அவளுக்குக் கூறினார்.

**'அற்றார்க்கு ஒன்று ஆற்றாதான் செல்வம்**
**மிகநலம்பெற்றாள தமியன் மூத்திற்று'**

இதுதான் அம்மா குறள். அதின்ர கருத்து என்னவென்டால்- தாய் குறுக்கிட்டுச் சொன்னாள். 'செல்வம் வைத்திருக்கின்ற ஒருவன் அந்தச் செல்வத்தை இல்லை என்று சொல்லாமல் வறியவர்களுக்கு கொடுக்காவிட்டால், அந்தச் செல்வம் பயன் இல்லாமல் போய்விடும். அது எப்படியென்றால் - ஒரு பெண் அழகு முதலிய நலன்கள் பெற்றிருந்தாலும், அவள் தன் வாழ்நாள் முழுவதும் தனியாக இருக்கிறாள் எனின் அது போன்றது தான் பிறருக்குப் பயன்படாத செல்வமும்' என்று விளக்கம் கூறினாள். அவர்கள் இருவரும் (பெற்றோர்) குறளையும் கூறி பொருளையும் கூறி முடித்த பின்னர், மிக அவசரமாகத் தான் இந்தக் குறளுக்குப் பொருள் சொன்னதை நினைத்து ஒருமுறை சிந்தித்துப் பார்த்தனர். தங்கள் மகளின் வாழ்வில் இருந்த அக்கறை அல்லவா? எம்மை இவ்வாறு அவசரம் கொள்ளச்செய்துவிட்டது என்று, தம்மிடையே கதைத்துக் கொண்டனர். பின்னர் அவளிடம் கேட்டனர். 'அதுசரி ஏன் இப்ப அந்தக் குறளும் அதன் பொருளும் என்றவாறான அவளின் கருத்தை உறுதிப்படுத்தும் நோக்கத்தோடு அவளிடம் பெற்றோர் கேட்டனர். அதற்கு அவளும் 'அந்தக் குறளின்ர கருத்து எனக்கு மிகவும் பிடித்துவிட்டது அம்மா' என்றாள். அதற்கு மேல் ஒன்றும் அவள் கூறவில்லை. சில நேரங்களில் வருகின்ற மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர். ஆசிரியர் வருவதாகக் கூறிச் சென்ற வெள்ளிக்கிழமையின் வருகைக்காக அவர்கள் மகிழ்ச்சியால் ஏங்கத்தொடங்கினர். ஆசிரியர் சொன்னமாதிரியே வெள்ளிக்கிழமை காலையில் அவள் வீடு வந்தார். அன்றைய வெள்ளிக்கிழமை அவளுடைய வாழ்வில் தோன்றிய ஒரு புனிதமான நாள் என்றே கூறலாம். வழமையாக வெள்ளிக்கிழமை என்பது இந்துக்கள், பௌத்தர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என்ற பேதம் இன்றி புனிதமான ஒருநாளாகக் கருதப்படுகிறது. அதேபோல் இன்று அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு புனித நாளா - பெரிய வெள்ளியாக இந்த வெள்ளிக்கிழமை இருந்தது.



கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்று கூறுவார்கள். அதேபோல ஆசிரியர் அவளின் வீட்டுக்குள் காலெடுத்து வைத்த அந்த வேளையில் தோன்றிய அவள் வீட்டில் இருந்த ஒவ்வொரு பொருட்களும் ஆசிரியருக்குச் செய்தி ஒன்றை உணர்த்திக்கொண்டிருந்தன. அவர் வரும்போது அவளின் வீட்டு முற்றத்தில் நின்றுகொண்டிருந்த தேமாமரத்தின் உச்சியிலிருந்து வெள்ளைப் பூவொன்று பறவை ஒன்று மரத்தில் இருந்து பறந்த காரணத்தால் உதிர்ந்து ஆசியரின் தலைமேல் விழுந்தது. இந்த நிகழ்ச்சியோடு மலர்ந்த முகத்துடன் அவர் அவளுடைய வீட்டுக்கு வந்தார். ஆசிரியர் வருகையை எதிர்பார்த்திருந்த அவளும் அவளுடைய பெற்றோரும் - இந்த இனிமையான செய்தியைச் சொல்ல மிகுந்த ஆவலாய் இருந்தனர்.

ஆசிரியருக்குத் தேநீர் தயாரிப்பதற்கு அவள் உள்ளே சென்றாள். அவர்கள் விடயத்தை ஆசிரியரிடம் கூறிவிட்டனர். ஆசிரியர் கூறினார். 'இண்டைக்கு இதுபோதும். இனித் தேநீர் குடித்தால் இருக்கிற வருத்தம் இன்னமும் கூடிவிடும். இந்த இனிப்பான விசயமே எவ்வளவு சுகரை ஏத்துதோ தெரியவில்லை' என்று கூறியவராக ஆசிரியர் மிகுந்த சந்தோசம் அடைந்தார். அப்படி ஆசிரியர் கூறியபோதும், அவள் அவரிற்கு அவரின் நோய்க்கு ஏற்றாற்போல தேநீரைக் கொண்டுவந்து கொடுத்தாள்.

ஆசிரியருக்கோ இருப்புக்கொள்ளவில்லை. இவ்வளவு சுலபமாக இவ்வளவு சீக்கிரம் இந்தக் காரியம் நிறைவு எய்துமென்று எண்ணவில்லை. அவர் மேற்கொண்டு செய்யவேண்டிய வேலைகள் பற்றி ஆசிரியர் அவளின் பெற்றோருடன் கதைத்தார்.

அந்தச் சமயம் அவள அங்கிருந்த தேநீர்க் கோப்பையை உள்ளே வைப்பதற்கு செல்பவள்போல விலகி உள்ளே சென்றாள். ஓரிரு மாதங்கள் கடந்த நிலையில் அவளுடைய குடும்பமும், அவனுடைய குடும்பமும் சந்தித்து நிச்சயம் செய்துகொண்டனர். பின்னர் அவளும், அவனும் ஒருவரை ஒருவர் கண்டு கதைத்துக் கொண்டனர். அவர்களின் சந்திப்பு பெற்றோர் முன்னிலையிலேயே நடைபெற்றது. கல்யாணத்திற்குரிய நாளினைக் குறித்துக் கொண்டு: அதற்குரிய வேலைகளில் இரு குடும்பமும் ஈடுபடலாயினர்.

திருமணத்திற்குரிய நாள் நிச்சயிக்கப்பட்ட அந்த வேளையில், அவன் கொழும்பு சென்று பொருட்கள் வாங்கிவருவதாகக் கூறிச் சென்றான். திருமணத்திற்குத் தேவையான பொருட்களை மலிவாக வாங்குவதற்கும், தன்னுடைய உறவினர்களுக்கு திருமண ஏற்பாடு பற்றிக் கூறுவதற்கும் என அவன் கொழும்பு சென்றான். அவன் திருமணத்திற்குரிய செலவீனங்களைச் சமாளிப்பதற்குப் பணத் தேவைக்காகவும், கொழும்பில் நின்று ஹலோ பேசிப் பணம் வேண்டவும் எனக் கொழும்புக்குச் சென்றான்.

திருமணத்திற்கான நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. அவள் பூமியில் உலாவிவரும் தேவதையாக நடந்துவந்தாள். அவள் கால்கள் தரையில்பட்டு நடக்கிறாளா? பறக்கிறாளா? என்ற வகையில் அவள் மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தாள். அவளுடைய அந்த மகிழ்ச்சியைப் பார்த்துப் பூமரங்களும் நிறையப் பூக்களைப் பூத்திருந்தன. அவளும் அவற்றை ஆலயத்திற்கு ஆண்டவனுக்குச் சூட்டவென மாலையாக்கிக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டு வரலானாள். அவன் கொழும்பிலிருந்து வரும்நாள் இதுவென அறிவித்துவிட்டு வந்தான். அவன் "ஹயேஸ்" வாகனத்தைப் பிடித்து சாமான்களை ஏற்றிக்கொண்டு கொழும்பிலிருந்து வந்தான். திருமணத்திற்கு வேண்டிய தாலி, கூறை, மஞ்சல் நிறத்தில் அவளது நிறத்திற்கும் கூறைக்கும் வேறுபாடு தெரியாவண்ணமென அவன் கூறையை எடுத்திருந்தான். மற்றும் பொருட்கள் எல்லாம் வேண்டியவனாக அவன் திரும்பிக் கொண்டிருந்தான. அவன் வந்து கொண்டிருந்த செய்தி அவளுக்கும் தெரிந்தது. அவள் முனனைக்காட்டிலும் மிகுந்த மகிழ்ச்சி கொண்டாள்.

அவள் வாழ்க்கையில் ஒரு திருப்பம். அவன் வாழ்க்கையில் ஒரு திருப்பம். இருவர் வாழ்க்கையிலும் திருப்பத்திற்குள் திரும்பி விபத்துக்குள்ளாகாமல் செய்யப்போகும் பயணம் பற்றிய கற்பனைகளில் அவள் பறந்து கொண்டிருந்தாள். பறந்து கொண்டிருந்த அவள் மனதினைப்போல அவன் பயணம் செய்த வாகனமும் பறந்து கொண்டிருந்தது. இவர்கள் வாழ்க்கைத் திருப்பத்தில் மிக எளிதாக திரும்பியதுபோல அந்த வாகனமும் மிக எளிதாக திருப்பமொன்றில் திரும்ப முனைந்த வேளையில் அந்தச் சம்பவம் நடந்தது. அவன் எடுத்து வந்த அந்த மஞ்சள் கூறையின் நிறம் சிகப்புக் கூறையாக மாறிவிட்டது. அவன் அந்தக் கூறையை கையில் பிடித்த வண்ணமாக வானத்தின் கூரையை நோக்கிக்கொண்டிருந்தான். அந்த வான் கூரையை காணமுடியாமல் இருந்தது. எ்திரே வந்த லொறியுடன் மோதியதால் வானில் வந்த அவனும், அதன் ரைவரும் அந்த இடத்திலேயே மரணமடைந்தனர். அந்த செய்தியைக் கேள்விப்பட்ட அவள் மனம் ஒரு கணம் வேதனைப்பட்டது. ஆனால், அவள் வேதனையால் பதறவில்லை. அழுதாள். முன்னரைப் போல துவண்டுவிடவில்லை.

ஆண்டவனின் பூசைக்கு சூடப்படாமல் வீழ்ந்துகிடக்கும் சில பூக்கள் அவள் நினைவுக்கு வந்தது. அவள் சில வேளைகளில் மாலைக்கு எனப் பூக்களைப் பறிக்கின்றவேளையில், இவளின் அவசரம் காரணமாக சில பூக்கள் நிலத்தில் விழுவதுண்டு. அவ்வாறு விழுகின்ற பூக்களைப் பார்த்து அவள கவலைப்படுவது உண்டு. ஆண்டவன் சந்நிதிக்குச் செல்லாமல் போகிறீர்களே என்று. இன்றைக்கு அவள் பூக்களைப் பறிக்கும்போது, அவள் கைநழுவிப்போன பூக்களில் ஒன்று இவளைப் பார்த்து சிரிப்பது போன்ற உணர்வு அவளிடம் தோன்றியது. நானும் சூடப்படாமல் வீழ்ந்து கிடக்கும் பூ. நீயும் சூடப்படாமல் இருக்கிறாய் என்று கேட்பதுபோல இருந்தது அவளுக்கு. ஆயினும் அவள் இப்போதும் மாலை சூடும் பணியை நிறுத்தவில்லை ஆண்டவனிற்கு...

(முற்றும்)

# உங்கள் நூலகத்திற்கு... புதிய வரவுகள்...



நூலின் தலைப்பு - சைவசமய தரிசனம்.
நூலினை எழுதியவர் - சைவப்புலவர் கவிமணி, சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன்
வெளியீடு - சைவப்பிரகாச அச்சியந்திரசாலை
பக்கம் - 97
விலை - 120/=

சைவசமய விரத அநுட்டானமுறைகளும், அதன் பலனும், புராண வரலாற்றுத் தொடர்பு என்பவற்றை நூலாசிரியர் தெளிவாக ஒழுங்குபடுத்தி எழுதியுள்ளார்.

* * * * *



நூலின் தலைப்பு - உயிரூட்டும் கடதாசி
நூலினை எழுதியவர் - ந.சிவகுமார்.
பக்கம் - 40

இந்த நூலினைப் பயன்படுத்தும் மாணவர்களுக்கு சிந்தனைகளை வளர்த்துக் கொள்ளவும் பெரிதும் உதவுகிறது. கற்பித்தல் சாதனங்கள் பெரிதும் இங்கே கிடைக்காததனால் மாணவர்களுக்கு வழிகாட்டி நூலாக அமைகின்றது.

* * * * *



நூலின் தலைப்பு - மட்டக்களப்பில் கண்ணதாசன்
நூலினை எழுதியவர் - சிதம்பரப்பிள்ளை தர்மகுலசிங்கம்
விடயம் - கவிஞர் கண்ணதாசன் பற்றிய ஒரு திறனாய்வு.
பக்கம் - 72
விலை - 200/=

* * * * *



சஞ்சிகையின் தலைப்பு - நடுகை
ஆசிரியர்கள் - த.பிரபாகரன். கு.லஷ்மணன்

இதழ் - மாசி, பங்குனி 2004
உழவு - 01
விதை - 01
பக்கம் - 12
விலை - 10/=

கவிதைகள், கதைகள் விமர்சனங்கள், விவாதங்கள் நேர்காணல்கள், மொழிபெயர்ப்புகள், தகவல்கள் எனப் பலதரப்பட்ட விடயங்கள் உள்ள டங்குகின்றன.

# மாடு!

வெள்ளை இரண்டு மாடு
பூட்டி
செம்பாட்டு ஒழுங்கையினூடே
மட்டுமல்லாமல்
பிரதான வீதியிலேயும்
பாரம் தூக்கிச் செல்கின்றது
தன்னுடைய
எருவினை !
நெடுந்தூரம்
கால் எடுத்து வைக்க
ஞாபகம் ஊட்டுகிறது
கம்மாலைக்காரன்
காலில் பதித்த
ஆணி!
எஜமானி
இரக்கம் இல்லாதவள்
அவனின் பெயரில்
எனது மடியில்
சூடு!
ஏரி விழுந்து
வளைவுடன் நெளிந்து
அங்கு மிங்கும்
எலும்பு கொழுத்தும்
கழுத்தில் பாரம்!
காயப்பட்டு செத்தாலும்
இதற்கு மட்டும் வீரம்
காளை
அடக்கும் போட்டி!
தவிடும், பிண்ணாக்கும்
சாப்பிட்டு
குடம் நிறைய தண்ணீர்
குடித்தும்
கட்டுக்குள்!
பக்கத்து தோட்டம்
ஒரு நாள்
பிடித்து கட்டிப்போட்டு
அடித்தும்
கூடுதலான நஷ்டஈடு
வாங்கியும்
யாராலும்
வேறுபடுத்த முடியவில்லை
நம்மை!
எங்களுக்கும் ஓய்வில்லை
முடிச்சு அறுந்து தப்பி
ஓடியும்
முடியவில்லை என்றால்
பிடித்து விடுவார்கள்
எங்களை விட
வேகமாக !

- செல்வம்

# இப்படித்தானோ...

நெஞ்சிலடித்து - ஓடி
வந்தணைத்து ஒப்பாரிவைப்பர்!
அப்புறமென்ன - கொஞ்சம்
தள்ளியிருக்க
எப்படியாம் -----?
செத்தவன் மீண்டும் செத்துப்போகும்படி
பித்துப்பிடித்த கதைகளை
வாய்கள் மெல்லும் -----
வெற்றிலை வரும்வரை

பாடையிலிருந்து - ஐயர்
பந்தல் வரை பார்த்து... பார்த்து
செய்தவர்கள்
அக்கம்... பக்கம் பார்த்து
வேலியோடு ஒதுங்குவார்கள் - வரும்போது
இருமிக் கொண்டு வந்து
உறுமிக் கொண்டு நிற்பார்கள்
செத்தவனை நினைப்பார்களா?

கட்டாடியும் மேளமும்
நிலத்திலிருக்க ஐயர்மட்டும்
கதிரையிலிருந்து காலாட்டியபடி...
மூவரின் எண்ணவோட்டமும்...
ஒரு மூவாயிரம் தாண்டுமா?
என்று தானிருக்கும்!

இடையிடையே - ஓரிரு
குரல்கள் ஓங்கியொலிக்கும்
எட்டிப்பார்த்தால்
கிட்டடிச் சொந்தமாயிருக்கும்.

அடிமனதில் ஆசையை
புதைத்தவள் மட்டும் - ஏதோ
பிரமை பிடித்தவளாய்
அழவும் முடியாமல்...
ஆற்றுப்படுத்தவும் முடியாமல்...

அஞ்சலி நோட்டீசை - அவள்
வீட்டு சுவரில் ஒட்டி
இனியவன் ஆத்மா - சாந்தியடையும்
என்று
கதைத்துக் கொண்டு
கூடித்திரிந்தவர்கள் வரவும்
பாடையில் வைத்துத் தூக்கவும்
சரியாக இருக்கும்
ஊரிக்காடு மட்டும்
ஊர்வலம் நீளும்!
முடிவில்
கை, கால், கழுத்தில் போட்டதை
கவனமாக வேண்டி மடியில்
கட்டுவான் கொள்ளிவைத்தவன்
பெரும் சுமைமுடிந்ததாய்
பெருமூச்சுவிட்டபடி விலத்துவார்கள்
ஒவ்வொருவரையும் ஒவ்வொருவர்.

அப்புறம்
கொஞ்சநாள் மட்டும்
வீட்டில் அழுகையொலி கேட்கும்
அதுவும்... கொஞ்சம் கொஞ்சமாக
சுருதி குறைந்து கொண்டுவரும்

இப்படித்தானோ...
என் சாவு வீடும் நிகழும்.

நெற்கொழு தாசன்

# திருமணத்தில் அன்றும் இன்றும்

பண்பு நிறைந்த மணமகளின் - கரம்
பற்றினான் மணமகன் அன்று
எண்ணரும் சொத்துடை மணமகளின் - கரம்
ஏந்துவான் மணமகன் இன்று

இலட்சணம் பார்த்து சாதகம் பார்த்து - மணம்
ஏற்றனன் மணமகன் அன்று
இலட்சம் கேட்டு வீடுகேட்டு - மணம்
இயற்றுவன் மணமகன் இன்று

சுபமுகூர்த்த வருகை பார்த்து - தாலி
சார்த்துவான் மணமகன் அன்று
படம் பிடிப்பவனின் வருகை பார்த்து - தாலி
சார்த்துவான் மணமகன் இன்று

மணமகள் கழுத்தில் தாலியைப் பிடித்து - முடிச்சுப்
போடுவான் மணமகன் அன்று
மணமகள் கழுத்தில் தாலியைப் பிடிக்க - முடிச்சுப்
போடுவார் மற்றவர் இன்று

அறுகரிசி வந்து முதலில் போடுவேன் - நானென்றே
அடிபிடி போடுவார் அன்று
வயிறு நிறைத்திடல் முதலில் - யாரென
பந்திக்கு முந்துவார் இன்று

உண்டவர் இலையை எடுத்தபின்னே - பந்தியில்
உட்கார்வார் பிந்தியோர் அன்று
உண்ட இலையை எடுக்கமுன்னரே - பந்தியில்
உட்கார்வார் பிந்தியோர் இன்று.

நாடிப் பெற்றோர் அடிபணிந்தே - ஆசி
நண்ணினன் மணமகன் அன்று
வீடியோக்காரன் வேண்டப்பணிந்தே - ஆசி
வாங்குவன் மணமகன் இன்று.

கட்டியதாலியை காலமெலாம் - கழுத்தில்
காப்பாள் மணமகள் அன்று
கட்டியதாலியை திருடர்க்கு அஞ்சி - கழற்றிக்
காப்பாள் மணமகள் இன்று.

எம்.பி.பாலமுரளி

# பேருந்து சிநேகம்!

அதிகாலை விடிந்ததும் அவசர அவசரமாக பேருந்து தரிப்பிடத்திற்குப் புறப்பட்டுச் சென்றேன். ஒரு மணி நேரத்திற்கு ஒரு தடவைதான் பேருந்து பயணிக்கின்றது. முதல் வரும் பேருந்தினை விட்டுவிட்டால் அவ்வளவுதான்...

கூட்டம் அதிகமாக இருந்தாலும், நெருசலில் முட்டி மோதி செல்லும் இடத்திற்கான பயணச்சீட்டினை பெற்றுவிடுவேன். பல தடவைகள் பயணச்சீட்டு கொடுப்பவரிடம் திட்டும் வாங்கியிருக்கின்றேன்.

ஒரு நாள் பேருந்தினுள் ஏறி கூட்டம் அதிகமாகவுள்ளதால், நெரிசலில் வழி எடுத்து யன்னல் ஓரமாய் நின்றிருந்தேன். என்னை தள்ளி விட்டது சனக்கூட்டம். நிலை தடுமாறி உட்கார்ந்திருந்த பெரியவர்மீது நான் சாய்ந்துவிட, என்மேல் கோபப்பட்டு சும்மா இருக்கவும் விடுறாங்கள் இல்லை... என்று என்னை கண்டவார்த்தைகளால் திட்டி, தனது இரு கைகளினாலும் என்னை தள்ளிவிட்டார்.

நான் கீழேவிழ முற்படும்போது, எனக்குப் பக்கத்தில் நின்றவன் என்னைத் தாங்கிப் பிடிக்க, அவனும் நிலைதடுமாறி என்னோடு சேர்ந்து பேருந்தினுள் கீழேவிழுந்தான். எழுந்திருக்க முடியாமல் கீழே இருக்க, எங்களைப் பார்த்து உள்ளே நின்றவர்கள் எல்லோரும் சிரித்தார்கள். வலி எனக்கும் என்னைத் தாங்கிய அவனுக்கும் மட்டும்தான் தெரியும்.

அன்றைய நாளில் இருந்துதான் அவன் என்னோடு நண்பன் ஆனான். ஒவ்வொரு நாளும் பேருந்தினுள் ஏறும்போது...

அவன் எனக்கு முதல் வந்தால் எனக்காக இருக்கையினை பிடித்திருப்பான். நான் முதல் வந்தால் அவனுக்காக இருக்கையினைப் பிடித்திருப்பேன். இப்படியாக பேருந்தில் ஏறும் இடத்தில் இருந்தும், இறங்கும் இடம் வரும்வரை நமது சந்திப்புக்கள் தொடரும்.

என்னைப் பற்றி அவனும் அவனைப்பற்றி நானும் அறியவாய்ப்பிருக்கவில்லை. ஏனெனில் பேருந்தினுள் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு பிரச்சினைகளைப் பார்த்தாலேபோதும்... இறங்கும் இடம் வருவதே தெரியாமல் இருக்கும்.

ஒரு நாள் பயணிகளை ஏற்றிக்கொண்டு வேகமாக போய்க்கொண்டிருந்த பேருந்தினுள் சினிமாப் பாடல்களும் ஒலிக்க, இன்னும் விரைவுபடுத்திக்கொண்டிருந்த பேருந்து - கண்ணை மூடி விழிக்கமுதல் ஒரு மின்சார தூணில் மோதி நான்கு தடவைகள் தடம்புரண்டது- யாருமே சிரிக்கவில்லை..

- செல்வா

சர்வதேச அரசியலில்...

கே.ரீ.கணேசலிங்கம்



**மறுவளமாக கூறுவதாயின் - அமெரிக்கா ஏற்படுத்திவரும் இஸ்லாத்துக்கு எதிரான போக்கு, முழு உலகத்தையும் பாதிப்புக்குள்ளாக்கும். இஸ்லாமியர்கள் மேற்காசியாவுக்குள் மட்டும் சுருங்கிய இனமல்ல. முழு உலகத்திலும் பரந்துவாழுகின்ற இனமாக இருப்பதுடன், மிகவேகமாகப் பரவிவரும் இனமாகவும் இஸ்லாமியர்கள் காணப்படுகின்றனர். எனவே, அவர்களது போக்கு - அமெரிக்காவுக்கு மட்டுமல்ல முழு உலகத்துக்குமே ஆபத்தானது என அமெரிக்கா பிரசாரம் செய்கிறது.**

# மேற்குலகின் வங்குரோத்து அரசியலால் இஸ்லாமிய உலகம் அணிதிரளலாம்

ஈராக்கில் நிகழ்ந்துவரும் பாரிய குண்டுத் தாக்குதலும், தற்கொலைத் தாக்குதலும் மீண்டும் உலகத்தை தம்வசம் ஈர்த்துள்ளது. சதாம் உசைன் கைது செய்யப்பட்டதுடன், அமெரிக்க - பிரித்தானியப் படைகள் மீதான தாக்குதல் நின்றுவிடுமென கணக்குப்போட்ட ஊடகங்களும், புலனாய்வுத்துறைகளும் தற்போதைய சம்பவத்தை கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர். ஜப்பானிய இராணுவம் மீதான தாக்குதலும், ஜப்பானிய மக்கள் மத்தியில் எதிர்ப்பலையைத் தூண்டிவிட்டுள்ளது. எனவே, இவ்வாறாம் ஈராக்கின் அரசியலை மீண்டும் ஒரு தடவை மதிப்பீடு செய்ய முயலுவோம்.

அமெரிக்க - பிரித்தானிய படைகளின் தாக்குதல் ஆரம்பமானதிலிருந்து 370 இற்கும் அதிகமான அமெரிக்கப் படைவீரர்கள் உயிரிழந்துள்ளனர். மிக அண்மையில் கார்க் குண்டுத் தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளன. அமெரிக்க - பிரித்தானியப் படைகள் மட்டுமல்ல ஈராக்கிய மக்களும் பல நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டுவருகின்றனர். ஈராக்கின் புறநகர்ப்பகுதிகளில் மட்டுமன்றி, நகரப்பகுதி களிலும், அமெரிக்க இராணுவ தளங்களுக்கு அண்மையிலும், அந்நிய இராணுவ முகாம்களுக்கு மத்தியிலும் தாக்குதல்கள் நிகழ்கின்றன.

ஆரம்பத்தில் சதாம் உசைன்தான் இத்தாக்குதலுக்குக் காரணமெனக் கூறினார்கள். அச்சந்தர்ப்பத்தில் அதுவே, யதார்த்தமானது போலவும் தெரிந்தது. ஆனால், தற்போது சதாமின் ஆதரவாளர்களைக் குறிவைத்துத் தாக்குதலை ஆரம்பித்துள்ளனர். இதுவும் எந்தளவுக்கு சாத்தியமான - அந்நியசக்திகளுக்குச் சாதகமான பதிலைத் தரும் என்பதில் சந்தேகமாகவே உள்ளது.

மறுபக்கத்தில் அமெரிக்கக் கூட்டு சக்திகளின் அரசியல் அணுகுமுறையும், போருக்கான நியாயப்பாடும் மிகமோசமாக விமர்சிக்கப்படுகின்றது. அதனால், இஸ்லாமிய உலகமே அமெரிக்க ஆட்சியின் அராஜகத்தைக் கண்டிக்குமளவுக்கு நிலைமை மாறிவருவதுடன், அமெரிக்க கூட்டணியின் வங்குரோத்தான அரசியலாலும், இஸ்லாமிய உலகம் தனிமைப்படுத்தப்படுகின்றது. முழு உலகத்திலும் இஸ்லாமிய அடையாளங்களுக்கு அபாயமானநிலை உண்டு என்பதை அமெரிக்காவின் தகவல் வலையமைப்பு உருவாக்கிவிட்டுள்ளது. அதிலிருந்து தப்புவதற்கு இஸ்லாமிய உலகத்தால் முடியாதுள்ளது. இத்தகைய அவமானமும், கொடுமையும் முழு உலகத்திலும் முஸ்லிம்களுக்கு நிகழுகின்றது. முஸ்லிம்கள் உலகத்தாலேயே ஒதுக்கப்படும் மனநிலை கொண்டவர்களாக மாறுகின்றனர்.

இது அமெரிக்காவின் வங்குரோத்து அரசியல் என்றே கூறவேண்டும். ஈராக்கில் சதாமை ஒரு எதிரியாகவோ அல்லது ஆப்கானிஸ்தானில் ஒரு பின்லேடனை எதிரியாகவோ கருதாது, முழு இஸ்லாமியர்களையும் எதிரிகளாக எதிர்ப்பதற்கு அமெரிக்காவே அறிமுகப்படுத்தியது. குண்டுத் தாக்குதல்களை நிகழ்த்துபவர்களாக, விமானங்களைக் கடத்துபவர்களாக, கொலை வெறியர்களாக இஸ்லாமியர்களை அடையாளப்படுத்துவதில் அமெரிக்கா வெற்றிகண்டுள்ளது. எந்த நாட்டில் எந்த விபத்து நிகழ்தாலும் முதலில் தேடப்படும் பட்டியலில் முதன்மையானவர்கள் இஸ்லாமியர்களே. இதனால், இஸ்லாமிய சமூகத்தின் கோப உணர்வின் வெளிப்பாடு தற்கொலைப் போராக மாறிவருகிறது. அத்தகையோரை அமெரிக்கா தூண்டிவருகின்றதேயனறி, அரசியல்ரீதியிலோ, பொருளாதார அடிப்படையிலோ அல்லது சமூக விழுமிய நோக்கிலோ அதனைக் கையாளாது, எதிரியையும் எதிர்ப்பு வார்த்தையையும் பரப்பி வருகிறது. இத்தகைய விவேகமற்ற அணுகுமுறை அமெரிக்காவையோ அல்லது ஒரு ஜோர்ஜ் வில்லியம் புஷ்ஷையோ தாக்குவதுடன் நின்றுவிடப் போவதில்லை. முழு உலகத்தையும் அபாயமான அலைக்குள் கொண்டு செல்லவேண்டிய நிலையை விரைவில் ஏற்படுத்தவுள்ளது.

மறுவளமாக கூறுவதாயின் - அமெரிக்கா ஏற்படுத்திவரும் இஸ்லாத்துக்கு எதிரான போக்கு, முழு உலகத்தையும் பாதிப்புக்குள்ளாக்கும். இஸ்லாமியர்கள் மேற்காசியாவுக்குள் மட்டும் சுருங்கிய இனமல்ல. முழு உலகத்திலும் பரந்துவாழுகின்ற இனமாக இருப்பதுடன், மிகவேகமாகப் பரவிவரும் இனமாகவும் இஸ்லாமியர்கள் காணப்படுகின்றனர். எனவே, அவர்களது போக்கு - அமெரிக்காவுக்கு மட்டுமல்ல முழு உலகத்துக்குமே ஆபத்தானது என அமெரிக்கா பிரசாரம் செய்கிறது.

இன்று முழு உலகத்திலுமுள்ள இஸ்லாமியர்களில் மிகச் சிறுபகுதியினரே அதிகம் போராடிவருகின்றனர். உதிரிகளாக ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும், பாலஸ்தீனத்திலும், காஷ்மீரிலும் போராடிவருபவர்கள் - எதிர்காலத்தில் கூட்டாக செயல்படுவதுடன், தமது போராட்ட வலுவை அதிகரிக்க, எல்லா நாடுகளிலும் தாக்குதல்களைத் தீவிரப்படுத்த வாய்ப்பு ஏற்பட்டுவருகின்றது. இதுவரைகாலமும் நிகழ்ந்த இராணுவ நடவடிக்கைகளாலும், தாக்குதல்களாலும் பல அரசுகள் ஆட்டங்காணத் தொடங்கிவிட்டன. பொருளாதார அரசியல் நெருக்கடிக்குள் சிக்கியுள்ளநிலை அமெரிக்கா, பிரித்தானியா போன்ற அரசுகளுக்கு ஏற்பட்டுள்ளது. எனவே, முழு இஸ்லாமிய உலகமும் ஒன்றுதிரளும்போது, உலகம் எதிர்கொள்ளுமா என்பது சந்தேகத்திற்குரியதே. இஸ்லாமியர்கள் ஒன்று திரளமாட்டார்கள் என்ற அவர்களின் பலவீனம் குறித்த எண்ணமே இன்று உலகத்திடமிருக்கும் பலமாகும். ஆனால், அது தற்போதைக்கு சாத்தியப்படாமல் இருக்கலாம். எதிர்காலத்தில் அதற்கான வாய்ப்பு இஸ்லாத்துக்கு எதிரான சக்திகளின் அணுகுமுறையால் சாத்தியப்பட வாய்ப்புண்டு. ஏனெனில், இஸ்லாமிய உலகத்திற்கு அப்படியான அவமானமும், இழுக்கும் தற்போது நிகழ்ந்து வருகின்றது. இந்த நெருக்கடிகள் அவர்களை ஒன்றுசேரவைக்கத் தவறுமாயின், ஒரேமாதிரியான அணுகுமுறைகளைக் சாத்தியப்படுத்தலாம். எதுவாயினும், இஸ்லாத்துக்கு எதிராக மேற்குலகத்தவர்கள் பின்பற்றும் அணுகுமுறை அபாயகரமானதாகவே உள்ளது.

சதாம் உசைனுக்குப் பின்பும் ஈராக் - அமெரிக்காவுக்கு இன்னோர் வியட்னாமாகவே மாறிக்கொண்டிருக்கின்றது. அதனால், தனித்த சதாம் என்றோ, பின்லேடன் என்றோ அமெரிக்கர்கள் கணக்குப்போடுவதுபோல் எண்ணிவிடமுடியாது. அது முழு இஸ்லாத்தின் வெளிப்பாடாகவே துலங்குகின்றது. அத்தகைய நடவடிக்கையின் பிரதிபலிப்புக்கள் உலகத்தில் பல பகுதிகளிலும் நிகழ்ந்தவண்ணமுள்ளன.

எனவே அமெரிக்கர் சார்ந்த உலகம் - இஸ்லாமிய உலகத்துக்கு ஏற்படுத்திவரும் நெருக்கடிக்குரிய பதிலை எதிர்கொள்ளவேண்டியநிலை தொடரும். அத்தகைய நெருக்கடிக்குள் ஒன்றாகவே ஈராக் விவகாரம் அமைந்துள்ளது. அமெரிக்காவின் அரசியலை மட்டுமல்ல பொருளாதாரத்தையும், பாதுகாப்பையும், அமைதியையும் பாதிக்கும் விடயமாகவே ஈராக் அரசியல் மாறிவருகின்றது.

## புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் - பகுதி VI - சிவா

*(நேற்றைய தொடர்ச்சி...)*

அடுத்து புலம்பெயர்ந்த நம்மவர்களின் முக்கியமான பிரச்சினை காலநிலையாகும்.

இங்கே 30 முதல் 35 பாகை செண்ரிகிறேற் வெப்பநிலையில் சேட்டைத் திறந்து விட்டுக் கொண்டு சறத்துடனும் சிலிப்பருடனும் சுற்றித் திரிந்த நம்மவர்களால், மைனஸ் 5 முதல் 15 செண்ரிகிறேற் வரை செல்லும் உறைபனி குளிர்நிலைக்கு - தலைக்கு கழுத்துக்கு, உடம்புக்கு, காலுக்கு என்று தனித்தனி உடுப்புகளாகப் போர்த்து மூடிக்கொண்டு திரிவதும் ஒரு பிரச்சினையாகவே இருந்தது.

# தொடரும் அகதிவாழ்வின் அவலங்கள்



உறைபனிக்குளிரைப் பற்றிக் கொஞ்சம்கூட உணர்ந்திராத அவர்களால் - அதில் நடமாடி அந்தச் சூழ்நிலைக்குத் தங்களைப் பழக்கப் படுத்திக்கொள்வதென்பது உண்மையிலேயே மிகமிக கஷ்டமான ஒரு விடயமாகத்தான் இருந்தது.

மொத்தத்தில் 1990 ஆம் ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த தமிழர்கள் - பல விடயங்களில் தங்களை மாற்றிக்கொள்ளவேண்டியதொரு இக்கட்டான நிலையைச் சந்தித்தார்கள்.

புதிய இடம்....
புதிய தளம்....
புதிய சூழல்....
மாற்றுக் கலாசார அழுத்தம்....

இவற்றுக்கு மத்தியில் அவர்கள் தங்களது இருப்பை உறுதிப்படுத்தியதென்பது, இப்போது பார்த்தால் சாதாரண விடயமாகத் தென்படலாம். ஆனால், நடைமுறையில் - அவர்கள் நிறையவே இழப்புக்களைச் சந்தித்திருக்கிறார்கள்.

முக்கியமாக - தங்களுடைய புகலிடத்தை தேடிக்கொள்வதற்காகச் சட்டத்துக்குப் புறம்பான வகையில் எல்லைக்களைக் கடந்த போது - பனிக்குளிருக்குள் சிக்கியும், தொடருந்துகளின் - காற்றுப்புகாத குறுகலான பெட்டிகளுக்குள் ஒழித்திருந்தபோதும், மூடப்பட்ட பார உந்துகளின் மறைவிடங்களுக்குள் மறைந்திருந்தபோதும் - மூச்சுத்திணறியும் உயிரிழந்தவர்கள் நிறையப்பேர். கப்பல், படகுகளில் சென்றபோது சீரற்ற காலநிலை மற்றும் அளவுக்கு அதிகமாக ஆட்களை ஏற்றியமை காரணமாக அவை கவிழ்ந்ததால், கடலில் மூழ்கி உயிரிழந்தவர்களும் பலர்.

அகதி முகாம்களில் ஏற்பட்ட வன்செயல்கள் மற்றும் இனவெறித் தாக்குதல்களில் சிக்கி உயிரிழந்தவர்கள் என்று ஒரு பெரிய பட்டியலே போடமுடியும்.

1989 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் - 31ஆம் திகதி - அப்போதைய யூக்கஸ்லோவியாவின் தலைநகராக இருந்த பெல்கிரேட் நகரத் தொடருந்து நிலையத்திலிருந்து பாரிஸ் நகரத்துக்கு புறப்பட்ட விரைவுத்தொடருந்திலே, யாழ்.குடா நாட்டைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் ஏறியிருந்தார்கள்.

இவர்கள் யார்... எப்படி பெல்கிரேட்டுக்கு வந்தார்கள் என்கின்ற விபரங்கள் எதுவும் தெரியாது. பாரிஸ் நகரத்துக்கு அல்லது ஜேர்மனியின் சார்முறூக்கன் நகரத்துக்குச் சென்று, அரசியல் தஞ்சம்கோரும் நோக்கத்துடன் இவர்கள் அந்தத் தொடருந்தில் ஏறியதாக நம்பப்படுகிறது.

கடவுச்சீட்டோ, அவர்களை அடையாளப்படுத்துவதற்கான ஆவணங்களோ இல்லாத நிலையில் - இவர்கள் இருவரும் அந்த விரைவுத் தொடருந்தின் - கழிப்பறையின் மேற்பகுதியில் இருந்த ஒரு பலகையை பெயர்த்து - உள்ளேயிருந்த சிறிய இடவெளிக்குள் கஷ்டப்பட்டு புகுந்துகொண்டு, தாங்கள் பெயர்த்த பலகையும், ஏதோ ஒருவிதத்தில் அது இருந்த இடத்தில் வைத்து மூடியிருக்கின்றார்கள்.

இந்தத் தொடருந்து பெல்கிரேட்டில் இருந்து புறப்பட்டு - தற்போது குவாட்சியா நாட்டின் தலைநகராக இருக்கும் 'சாகிரப்', சிலவோனிய நாட்டின் முக்கிய நகரான 'மரிபோர்' மற்றும் ஒஸ்ரியாவின் முக்கிய நகரான 'கிராட்ஸ்', ஜேர்மனியின் 'சார்புறுக்கன்', பிரான்சின் 'மெட்ஸ்', 'நான்சி' ஆகிய நகரங்களூடாக பாரிஸூக்குச் செல்வது வழக்கம்.

ஏறக்குறைய 16 மணித்தியாலங்கள் இந்தத் தொடருந்து பயணிக்கும்.

மார்கழி மாதம் எப்போதும் சிலவோனிய-ஒஸ்ரிய எல்லைப்பகுதியில் உள்ள மலைப் பகுதிகளில் - உறைபனி வெப்பநிலையாக மறை 15 பகை சென்ரிகிறேட்டிலிருந்து 20 பாகை சென்ரிகிறேட் வரை குளிர் இருக்கும்.

இந்தத் தொடருந்தில் மறைந்திருந்து பயணித்த இந்த இரு இளைஞர்களும் - இந்த உறைபனிக்குளிர் தாக்கி இறந்துவிட்டார்கள். ஆனால், அவர்கள் இறந்த விடயம் யாருக்கும் தெரிந்திருக்கவில்லை.

ஒருவாரம் கழித்து பாரிஸ் நகரத்தின் கார்து லெஸ்ட் (Gare de l'est) தொடருந்து நிலையத்தில் இந்தத் தொடருந்து பெல்கிரேட் செல்வதற்காகத் தயார்நிலையில் நின்றபோது - குறிப்பிட்ட அந்த பெட்டியில் துர்நாற்றம் வீசியதை தொடர்ந்து மேற்கொண்ட தேடுதலில், அந்த இரு இளைஞர்களின் சடலங்களும் சிதைவடைய ஆரம்பித்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

முதலில் அந்த இரு இளைஞர்களும் யார்? எந்த நாட்டை சேர்ந்தவர்கள் என்பதற்கான எந்தத் தடையமும் அவர்களுடைய சடலங்களில் இருக்கவில்லை. அவர்களுடைய சட்டைப் பைகளில் 80 அமெரிக்க டொலர் பணம் மற்றும் பெல்கிரேட் நகரத்தின் உள்ளூர் பேருந்து ஒன்றில் பயணித்ததற்கான பற்றுச் சீட்டுக்கள் என்பனவே இருந்தன. அவர்களது உடல்களைப் பரிசோதனைக்குட்படுத்திய பாரிஸ் நகர் மருத்துவர்கள் - டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியே இவர்கள் அதிக உறைபனி குளிர்தாக்கி இறந்திருக்கவேண்டும் என்று தெரிவித்தனர்.

இந்தத் தகவலின் அடிப்படையில் பாரிஸ் நகர காவல்துறையினரால் - பெல்கிரேட் நகர காவல்துறையினருடன் இணைந்து இந்த இளைஞர்களைப் பற்றிய தகவல்களைத் திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

டிசம்பர் 31 ஆம் திகதி பெல்கிரேட் நகர பேருந்து நிலையத்தில் ஒளிப்பதிவுக் கருவிகள் மேற்கொண்ட பதிவுகளை ஆய்வுசெய்து, அந்த இரு இளைஞர்களுக்கும் பாரிஸ் நகரத்திற்கும் உள்ள அந்த பேருந்தில் ஏறுவதற்கு முன்பும், ஏறியபோது எடுக்கப்பட்ட காட்சிகளின் அடிப்படையில் அவர்கள் இருவரும் இளைஞர்களே என்ற ஊகத்திற்கு பாரிஸ் பெல்கிரேட் காவல்துறையினர் வந்தனர்.

இதன் அடுத்தகட்டமாகப் பெல்கிரேட் நகரத்தில் இலங்கையர்கள் தங்கியிருந்த ஒரு விடுதியை முற்றுகையிட்டுச் சோதனை இட்டபோது, இந்த இரு இளைஞர்களினதும் கடவுச்சீட்டுக்கள் கிடைத்தன.

அதில் கணபதிப்பிள்ளை பத்மநாதன் (வயது 26) யாழ்ப்பாணம். பூலோகசிங்கம் பிரதீபன் (வயது 25) இணுவில் என்ற விபரங்கள் இருந்தன. ஆனால், அவை நிழல்படங்கள் மாற்றிய கடவுச்சீட்டுக்கள் என்பதை காவற்துறையினர் கண்டுபிடித்தனர்.

அந்தத் தங்கும் விடுதியிலிருந்து தமிழர்கள் தெரிவித்த தகவல்களின்படி - அந்த இரு இளைஞர்களும் கிறீஸ் நாட்டிலிருந்து வந்ததாகச் சொல்லியதாகவும், ஒருவரின் பெயர் சிங்கம் என்றும் மற்றவரின் பெயர் நாதன் என்று மட்டுமே தெரியவந்தது.

இறுதியில் அடையாளம் தெரியாத இரண்டு இளைஞர்களும் - இலங்கையர்கள் என்ற குறியீட்டுடன் அந்த இரு இளைஞர்களின் சடலங்களும் பாரிஸ் நகரத்தில் அடக்கம் செய்யப்பட்டதாக அறியமுடிந்தது.

(தொடரும்)

யாழ்ப்பாணம்.



நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம் அதனை*
*மிகல்ஊக்கின் ஊக்குமாம் கேடு.*

திருக்குறள்.

## நமது நோக்கு

### நிராகரிக்கப்படவேண்டிய ஜே.வி.பியின் திட்டங்கள்

இலங்கையில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்த மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டை சிறிலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. கூட்டமைப்பு நிராகரிப்பதாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச கூறியுள்ளதுடன், இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையானது தங்கள் கூட்டமைப்பின் எந்தச் செயற்பாட்டையும் எந்த வகையிலும் கட்டுப்படுத் தாது எனவும் தெரிவித்துள்ளார் என்பது ஒன்றும் அதிசயமான செய்தியல்ல.

சட்டியில் உள்ளது அகப்பையில் வரும் என்பதைப்போல், இந்த முன்னாள் சோசலிஷவாதிகளின் இனவாதச் சிந்தனையிலிருந்து இதைவிடவேறு ஆக்கபூர்வமான எந்த விடயமும் வராதெனபதை தமிழ்மக்களும், சமாதானத்தை - நிலையான, நேர்மையான அரசியல் தீர்வை விரும்பும் சகல சக்திகளும் அறியும்.

ஆரம்பம் முதலே சமாதான முன்னெடுப்பு முயற்சிகளை முற்றுமுழுதாகவும், பகிரங்கமாகவும் வெளிப்படுத்தி, அதற்கு எதிரான அறிக்கைகளையும் போராட்டங்களையும் நடத்தி வந்துள்ள ஜே.வி.பி, தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்துகொண்டதன்பின்னர், அதன் போர் முனைப்பு வெறியுடன்கூடிய இனவாதத்தன்மையும் நெருப்பாக்கிக்கொண்டு, எரிகிற கொள்ளிக்கு எண்ணெய் வார்க்கும் வேலைகளில் இறங்கியுள்ளது.

ஏற்கனவே, சமாதான முயற்சிகளுக்கான பெரும்பான்மையின மக்களின் ஆதரவை - ஆணையைப்பெற்று ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசானது, நோர்வே அரசின் அனுசரணையுடனும், சர்வதேச சமூகத்தின் ஆதரவுடனுமாக விடுதலைப்புலிகளுடன் மேற்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையானது - சகலதரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்றாகும்.

இந்தப் புரிந்துணர்வு மற்றும் போர்நிறுத்த உடன்பாட்டின் அடிப்படையிலேயே கடந்த இரண்டாண்டு சமாதான மற்றும் அமைதிநிலை - ஓரளவுக்கேனும் பேணப்பட்டு வந்துள்ளது. உண்மையில் இந்த அமைதிச்சூழல் - தமிழ்மக்களின் இயல்பு வாழ்வுக்கு, சுந்திரமான வாழ்வுக்கு எந்தவிதமான உறுதியான நம்பிக்கையையும் ஏற்படுத்தாதநிலையில், அதன்மூலம் அனுகூலங்களை எல்லாவகையிலும்பெற்று அனுபவித்து வருபவர்கள் தென்பகுதி பெரும்பான்மையின மக்களேயாவர்.

இன்னும் தெளிவாகக் கூறுவதானால் - இந்தப் புரிந்துணர்வு உடன்பாட்டின் எத்தனையோ விடயங்களை ரணில் தலைமையிலான அரசு இந்த இரண்டாண்டு காலத்தில் நடைமுறைப்படுத்தாமல் காலங்கடத்தி வந்துள்ளதுடன், ஜனாதிபதி - பிரதமர் ஆகியோருக்கிடையேயான அதிகார மோதல் காரணமாக, விடுதலைப்புலிகள் பல தடவைகள்மிகவும் மோசமான பாதிப்புக்குள்ளான போதிலும்கூட, அவர்கள் பொறுமை காத்ததன் காரணமாக மற்றொருபோர் உருவாகும் சூழல் தவிர்க்கப்பட்டது என்பதே உண்மையுமாகும்.

இந்தப் போர்நிறுத்த உடன்பாட்டு மீறல்களில் ஜனாதிபதி மேற்கொண்ட நடவடிக்கைகளே முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும்.

உண்மையில் சமாதான முயற்சிகளைக் குழப்பும், அமைதியைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகார வலுவைப் பல தடவைகள் பயன்படுத்தியவர் என்பதை உலகம் அறியும்.

விடுதலைப் புலிகளின் சமாதானம் மீதான பற்றுறுதியும், நிதானமும், பொறுமையும் ஜனாதிபதியின் நோக்கங்களை சிதைத்துவிட்டதால், இறுதியில் வேறுவழியின்றி ஆட்சியைக் கலைக்கும் சர்வாதிகார நடவடிக்கையில் அவர் இறங்க வேண்டியதாயிற்று. இதற்கு அவருக்கு ஜே.வி.பியின் அழுத்தமும் ஒரு காரணமாகும்.

ஜே.வி.பி எப்போதுமே - சமாதானத்தை, பேச்சுவார்த்தையை, போர்நிறுத்த உடன்பாட்டை மட்டுமல்ல மாகாண சபைகள் அதிகாரப் பரவலாக்கல் போன்றவற்றைக்கூட நிராகரித்து எதிர்க்கும் கட்சியாகும்.

புரிந்துணர்வு உடன்பாடு - தேசியப் பாதுகாப்புக்கு ஆபத்தானது எனக்கூறும் ஜே.வி.பியினர், நியாயமான நிபந்தனைகளின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் புதிய உடன்பாடு செய்யப்படவேண்டும் என்று இப்போது புலம்பத்தொடங்கியுள்ளனர்.

இது சிங்களப் பேரினவாதிகள் - தமிழ்மக்களின் பிரச்சினையை இன்றும் இழுத்தடித்து ஏமாற்றப் பார்க்கும் தந்திரோபாயத்தின் மற்றொரு ஏமாற்று உத்தியாகும்.

தமிழ்மக்களின் சார்பில் விடுதலைப் புலிகள் தமது சமாதானம் தொடர்பான நிலைப்பாட்டை தீர்க்கமாகவும், தெளிவாகவும் தென்பகுதி பெரும்பான்மை இனமக்களுக்கும், பேரினவாத அரசியல் தலைமைகளுக்கும், சமாதானத்தை வலியுறுத்தும் ஏனைய பொது அமைப்புக்களுக்கும், ஏன் சர்வதேச சமூகத்துக்கும் வெளிப்படையாகத் தெரிவித்துள்ள நிலையில், போர்நிறுத்தத்தைப் பேணியும் சமாதான முயற்சிகளின் நியாயமான அணுகுமுறைகளுக்கு உறுதியான ஆதரவை வழங்கி ஒத்துழைத்துவரும்நிலையில், மீண்டும் புதிய போர்நிறுத்த உடன்பாட்டையும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் நிபந்தனைகளின் அடிப்படையில் மேற்கொள்ளும் திட்டத்தை முன்வைக்கும் ஜே.வி.பியினரின் போக்கினை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

அப்படி வலியுறுத்துவதானது - இது வரையிலான சமாதானம் தொடர்பான சர்வதேச முயற்சிகளை நிராகரிப்பதுடன், அதில் ஆழ்ந்த அக்கறையுடன் செயற்பட்ட அனைத்து சக்திகளையும் அவமதிப்பதாகவுமே இருக்கும்.

## நாடும் நடப்பும்

*செய்தி:-* தேர்தல் பிரசாரங்களில் - சிங்கள இனவாதவிஷம் அதிகமாக பேரினவாதக்கட்சிகளால் கக்கப்படும் அபாயம்...
- சமாதான சக்திகள் கருத்து




பௌத்த, சிங்கள பேரினவாத கட்சிகள்

# முப்பது வீதமான இடங்களிலே பெண் வேட்பாளர்களை நிறுத்துக

## பெண்கள் அமைப்பு கோரிக்கை

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சிகளும் தமது வேட்பாளர் பட்டியலில் ஆகக்குறைந்தது 30 சதவீதமான இடங்களில் பெண்வேட்பாளர்களை நியமிக்கவேண்டும் என்று பெண்கள் தேசிய அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

பெண்கள் தேசிய அமைப்பின் விசேட கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் இடம்பெற்றபோதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் -

ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெறும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் அனைத்துக்கட்சிகளும் ஆகக்குறைந்தது 30 சதவீதமான பெண்வேட்பாளர்களைப் போட்டியில் நிறுத்துவதை உறுதிப்படுத்தவேண்டும்.

அதேசமயம் தேசியப்பட்டியல் வேட்பாளர்களிலும் 30 சதவீதம் பெண்கள் இடம் பெறவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த அமைப்பின் தலைவி இந்திராணி இரியகொல்ல இது தொடர்பாக விடுத்திருக்கும் அறிக்கையிலும் இந்த விடயம் குறித்துச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

இதேவேளை, இலங்கைப் பெண்கள் அமைப்பு என்ற அரசசார்பற்ற அமைப்பும், நாடாளுமன்றத் தேர்தலில் 30 சதவீதம் பெண்களுக்கு இடமளிக்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறது.

தெற்காசியாவிலே இலங்கை அரசியலில் பெண்கள் பங்குபற்றும் வீதமும், முடிவெடுக்கும் அதிகாரம் உள்ள வீதமும் குறைவாகவே இருக்கிறது. இந்தநாடு சோசலிச குடியரசாக இருந்தபோதும் - ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் அபிவிருத்தி குறித்த சுட்டியில் உயர்ந்த நிலையில் இருக்கின்றது. மேலும் பெண்கள் உள்ளூராட்சி சபைகள், மாகாண சபைகள், மற்றும் நாடாளுமன்றத்தில் 5 சதவீதத்துக்கும் குறைவான அங்கத்துவத்தையே கொண்டிருக்கின்றனர்.

2002 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் 2.3 வீதமான பெண் வேட்பாளர்களே இடம்பெற்றிருந்தனர். என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டிருக்கிறது.

## இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில்

# பொதுத்தேர்தல் நடத்துவது குறித்து முப்படைத் தளபதிகளுடன் சந்திப்பு

## தேர்தல் ஆணையாளர் இன்று நடத்துவார்

(கொழும்பு)

இரணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் பொதுத்தேர்தல் நடத்துவது தொடர்பாக - தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க முப்படைத்தளபதிகளுடன் இன்று பேச்சுவார்த்தைகளை நடத்த இருக்கிறார்.

வடக்கு - கிழக்குப் பகுதியிலுள்ள இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளில் தேர்தலை எவ்வாறு நடத்துவது என்பது குறித்து ஆராயவே தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா - முப்படைத் தளபதிகளையும் சந்திக்கவுள்ளார்.

அத்துடன் வடக்கு - கிழக்கில் உள்ள எல்லைப்பகுதிகளது பாதுகாப்புக் குறித்தும், கட்டுப்பாட்டுப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எவ்வாறு வாக்களிப்பில் கலந்துகொள்ளப்போகின்றனர் என்பது குறித்தும் விரிவாக ஆராயப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், வன்னி , மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உள்ள பல லட்சம் வாக்காளர்கள் ஒரே தினத்தில் படையினரின் கட்டுப்பாட்டுப்பகுதிகளுக்குச் செல்லவேண்டும் என்பதால் சோதனைச் சாவடிகளில் கெடுபிடிகளைத் தளர்த்துவது குறித்து விரிவாக ஆராயப்பட இருப்பதாகத் தெரியவருகிறது.

பொலிஸாரின் பாதுகாப்பிற்கு தேவை ஏற்படின் அவர்களின் பாதுகாப்பிற்கு மேலதிகமாக இராணுவத்தினரும் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்தார்.

# நாடாளுமன்ற தேர்தலின் பின்னரே இலங்கையுடன் வர்த்தக தொடர்பு

## அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி தெரிவிப்பு

ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள தேர்தலின் பின்னரே இலங்கையுடனான வர்த்தகத்தை ஆழமாக மேற்கொள்ளமுடியும். எனவே இந்த தேர்தலுக்காகவே அமெரிக்கா காத்திருக்கிறது.

இவ்வாறு அமெரிக்காவின் வர்த்தகப் பிரதிநிதி றொபேட் சொலிக் இலங்கையின் வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்க, மற்றும் அமெரிக்காவுக்கான இலங்கைத்தூதுவர் தேவிந்த சுபசிங்க இருவரையும் சிங்கப்பூரில் வைத்து இருபக்க, பலபக்க வர்த்தக செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடிய போது தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவினால் மூன்று அமைச்சுக்கள் பொறுப்பேற்கப்பட்டதை அடுத்து, அமெரிக்காவும் - இலங்கையும் செய்யவிருந்த சுதந்திர வர்த்தக உடன்பாடு நிறுத்தப்பட்டது.

இந்த சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மூலம் இலங்கை இரண்டு பில்லியன் டொலர் பெறுமதியான தைத்த ஆடைகளை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யவிருந்தது. ஆனால் அதுவும் தற்போது நிறுத்தப்பட்டுவிட்டது.

தைத்த ஆடைகள் தொழிற்சாலை நேரடியாகவும், மற்றும் மறைமுகமாகவும் ஒரு மில்லியன் பேருக்கு வேலைவாய்ப்பினை வழங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## மினுவாங்கொட பிரதேசசபையின்

# எதிர்க்கட்சித் தலைவர் ஐ.தே.கவுக்கு மாறினார்

மினுவாங்கொடை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் பாலித்த லிகினியகுமார நேற்றுமுன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொண்டார்.

2002 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பாகப் போட்டியிட்டு மினுவாங்கொடை பிரதேச சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மினுவாங்கொட பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் நேற்று முன்தினம் முற்பகல் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவிடமிருந்து ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டார்.

1986 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்துகொண்ட இவர், 1997 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியில் போட்டியிட்டு மினுவாங்கொட பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டவராவார்.

தெற்குத் திசையினிலே...

இந்திரஜித்

# தேர்தல் வியூகங்களுக்கான அரசியல் மூலோபாயங்கள்...

ஜனநாயக நாடொன்றில் 5 வருடங்கள் ஒரு கட்சி ஆட்சியிலிருப்பதும், பின்னர் மக்கள் விரும்பினால் அந்தக் கட்சியை ஆட்சியில் அமர்த்துவது அல்லது மாற்றுக் கட்சியைப் பதவிக்குக் கொண்டுவருவது என்பதே நடைமுறையில் இருந்து வருகின்றது. இது இலங்கையிலும் சுதந்திரத்திற்குப் பின்னர் உரிய முறையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. எனினும், 1977 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் காரணமாக, இன்று இலங்கையை ஏனைய நாடுகள் கேவலமாகப் பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கை மற்றொரு சிங்கப்பூராக மாறும் என முன்னர் மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், அந்த நாடு இன்று எல்லோரும் பிச்சை போடும் நாடாக மாறிக்கொண்டிருக்கிறது. இவற்றுக்கெல்லாம் காரணம் - நாட்டை ஆட்சிசெய்த சிங்களத் தலைவர்களின் குறும்பார்வை கொண்ட நோக்கமே என்பதில் மறுப்பில்லை. டட்லி சேனநாயக்க, எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தன போன்ற தலைவர்கள் இதில் முக்கியமானவர்கள்.

இவர்களின் ஆட்சியின்போது - இலங்கையில் இருக்கக்கூடிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான வழிமுறைகள் நிறையவே இருந்தன. எனினும், அவற்றை இவர்கள் குறுகிய சிந்தனையுடன் நோக்கியதன் காரணமாக அதில் வெற்றிகாண முடியவில்லை. குறிப்பாக இவர்கள் மூவரும் ஆட்சியிலிருந்த காலத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காக ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டன.

அமரர் செல்வநாயகத்துடனும், மூன்றாம் தரப்பு நாடான இந்தியாவுடனும் இந்த ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டன. எனினும் அவை யாவும் தமது சொந்த விருப்புவெறுப்புக்களை மையப் படுத்தியமையாலும், தமிழ் மக்களின் அபிலாஷைகளை உதாசீனப்படுத்தியமையாலும் - இனப்பிரச்சினைக்கான தீர்வு இன்று வரை காணமுடியாது போயுள்ளது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டதோ இல்லையோ - ஆட்சிக்கு வரும் சிங்களக் கட்சிகள் யாவும் இனப்பிரச்சினையைத் தீர்த்து விடுவோம் என்ற பாணியிலேதான் ஆட்சிபீடம் ஏறுகின்றன. ஆனால், அந்த ஆட்சி நிலவும் 5 வருட காலப்பகுதிக்குள் ஏதோ சில முன்னெடுப்புக்கள் எடுக்கப்பட்டு, பின்னர் அவை கைவிடப்படுகின்றன. இது ஒரு வ்கையில் தமிழர்களே பார்த்த விடயம் என்றபோதிலும், மறுபுறத்தில் இன்று தமிழர் மத்தியில் தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கை இராணுவத்துக்கு நிகராக வளர்த்து விட்டதும் இந்த சிங்களத் தலைமைகளின் அரசியல் காய்நகர்த்தல்களின் விளைவுகளேயாகும்.

இலங்கையின் வரலாற்றில் சிங்கள துட்டகைமுனுவும் - தமிழ் எல்லாளனும் போரிட்டு, எல்லாளன் சூழ்ச்சியின் அடிப்படையில் கொல்லப்பட்டான் என்ற கதை கூறப்படுகிறது. ஆனால், சிங்களவரின் தரப்பில் அந்த சூழ்ச்சி என்ற கதையானது - ஒரு போரியல் தத்துவமற்ற செயல் என்பதைக் காட்டிலும், போரியல் சூழ்ச்சி என்றே கூறப்பட்டது.

எனவே, சிங்களவனான துட்டகைமுனு - அன்று எல்லாளனான தமிழனைத் தோற்கடித்து சரித்திரத்திற்கு ஊறு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவே, இன்றும் சிங்களக் கட்சிகள் உறுதியாக இருக்கின்றன. இதனால்தான் துட்டகைமுனுவை அந்தக் கட்சிகள் வீரனாகப் போற்றுகின்றன.

இலங்கை தேசியக்கொடியில் சிங்கம் பொறிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் தேசிய விலங்கு என்ற அடிப்படையில் இல்லாமல், அது சிங்களவரின் உரிமை என்ற எண்ணம் சிங்களவர்கள் மத்தியில் பரப்பப்பட்டது. சிங்களவர்கள் தம்மை சிங்கங்களாகவே எண்ணுகின்றனர்.

இதன் காரணமாகவே, அவர்கள் அனைத்து தமிழர்களையும் விடுதலைப் புலிகளாகக் கருதுகின்றனர். இது சிங்களவர்களின் மனதில் எந்தளவு மாற்றத்தை சிங்களத் தலைவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணமாகும்.



வரலாறுகள், அதன் தடங்கள் யாவுமே நினைவுகூரப்படவேண்டியது அவசியமே. ஆனால், சிங்களவர் மத்தியிலான வரலாறுகள் சிலவற்றில், நவீனத்துவம் அல்லது தெளிவுகள் ஏற்படுத்தப்படவேண்டியது நியாயமென்றே கருதவேண்டியுள்ளது.

நாட்டில் தமிழர்களுக்கு எதிராக தமது நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து வந்த சிங்களத் தலைமைகள் - தற்சமயம் தமக்கிடையே குரோதங்களை வளர்த்துக்கொண்டுள்ளன. சுதந்திரத்திற்குப் பின்னர் ஆட்சியிலிருந்து வரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இன்று சிங்கள மக்களின் அல்லது தமிழ் மக்களின் அபிமானக் கட்சிகள் என்பதைக் காட்டிலும், இரண்டு கட்சிகளும் விரோத மனப்பாங்குடைய கட்சிகள் என்ற அளவில் செயற்பட்டுவருகின்றன.

இதன் காரணமாவே, இந்த இரண்டு கட்சிகளில் - ஒரு கட்சி கொண்டுவரும் அல்லது ஏற்படுத்தும் திட்டத்தை மாற்றுக் கட்சி நிராகரிப்பதிலேயே குறியாக இருக்கிறது. இது நாட்டை முன்னேற்றும் நோக்கிலான நகர்வு அல்ல, தமது கட்சி நல்னை நோக்காகக் கொண்ட செயலாகும்.

முன்னர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சி 17 வருடங்கள் நீடித்தபோதிலும், அதற்குப் பின்னர் வந்த கட்சிகள், குறுகிய ஆயுளையே கொண்டிருந்தமையை இங்கு காணலாம். இதற்குக் காரணம் - ஒரு ஆட்சி தொடரும்போது எதிர்க்கட்சி அந்த ஆட்சியின் குறைகளைச் சுட்டிக்காட்டி நல்ல கொள்கைகளுக்கு வழி விடும் நிலைமாறி ஆட்சியிலுள்ள கட்சி எதனைச் செய்தாலும், அதற்கு எதிராகச் செயற்படுவதே எதிர்க்கட்சி என்ற நிலைமை தோற்றுவிக்கப்பட்டுள்ளமையேயாகும்.

இலங்கையில் பிந்திவந்த அரசியலில் பொதுஜன ஐக்கிய முன்னணி 1994 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபின்னர், அது முன்வைத்த இனப்பிரச்சினைத் தீர்வுநகலை, ஐக்கிய தேசியக் கட்சியினர் நாடாளுமன்றத்தில் வைத்து எரியூட்டினர். அதற்கு முன்னர்- ஐக்கிய தேசிய கட்சி இந்தியாவுடன் இணைந்து மாகாணசபைத் திட்டத்தை முன்வைத்தபோது, அதனை சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் எதிர்த்தன.

இந்த நிலையில், இன்று தமிழீழ விடுதலைப் புலிகளால் சுயநிர்ணய உரிமையை பிரதிபலிக்கும் இடைக்கால தீர்வுயோசனை முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கெதிராக பொதுஜன ஐக்கிய முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் செயற்படுகின்றன.

எனினும், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி தீர்வு ஒன்றைக் காணப்போவதாக அந்தக் கட்சிகள் கூறுகின்றன. இதில் புதுமை என்னவென்றால், அதிகாரப் பகிர்வை ஆட்சேபிக்கும் மக்கள் விடுதலை முன்னணி, எவ்வாறு நாட்டில் பிரச்சினை தீர்க்கப்படுகிறதோ, இல்லையோ, நாம் ஆட்சிக்கு வரவேண்டும் என்பதில் முழுமூச்சாக இருப்பது இதிலிருந்து புரிகிறது. மக்கள் விடுதலை முன்னணியால், ஒருபோதும் பிரதான கட்சியாக தனித்து நின்று ஆட்சி அமைக்க முடியாது. எனவேதான், இன்றிருக்கும் நிலையிலிருந்து மேலும் முன்னேற வேண்டுமாயின், ஏதோ ஒரு பிரதான கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைப்பதற்கு உதவியளிப்பதே அதன் நோக்காக இருக்கிறது.

இதன் மூலம் - தமக்குச் சிறந்த ஒரு அரசியல் தளத்தை அமைத்துக்கொள்வேதே அந்த கட்சியின் ஒரே எண்ணமாகும். இதற்கு வாய்ப்பாக எந்த கட்சியைப் பயன்படுத்தலாம் என மக்கள் விடுதலை முன்னணி எதிர்பார்த்துக் கொண்டிருந்தவேளையில், பொதுஜன ஐக்கிய முன்னணி அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தது. ஜனாதிபதியின் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் ஆட்சியை அமைப்பதற்கு ஏதாவது ஒரு கட்சியின் உதவியை தேடிக்கொண்டிருந்த வேளையில், மக்கள் விடுதலை முன்னணியின் நோக்கம் அதற்கு வாய்ப்பாக இருந்தது.

முன்னர் பொதுஜன ஐக்கிய முன்னணி இனப்பிரச்சினை தீர்வுக்கு, மக்கள் விடுதலை முன்னணியின் கொள்கைகள் ஒத்துவராது என்பதைக் கருத்திற்கொண்டு அதனுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரத்துச் செய்து கொண்டது. எனினும், பின்னர் அரசியலில் கொள்கைக்கு முக்கியம் வழங்கப்போனால் எதுவுமே சாதிக்கப்போவதில்லை என்ற அடிப்படையில், அது மக்கள் விடுதலை முன்னணியுடன் கொள்கை உடன்பாடு செய்துகொண்டு ஐக்கிய மக்கள் சுந்திர முன்னணி என்ற கூட்டமைப்பை உருவாக்கியுள்ளது.

இந்த கூட்டமைப்பு தொடர்பான ஒப்பந்தத்தில் - இனப்பிரச்சினை தீர்வுக்கு, அதிகாரப் பகிர்வை பொதுஜன ஐக்கிய முன்னணி வலியுறுத்துகின்ற அதேநேரம், மக்கள் விடுதலை முன்னணி, பிரதேச மட்டத்திலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்தியுள்ளது.

எனவே, நாட்டின் இன்றைய பிரதான பிரச்சினைக்கு தீர்வை காண்பதில் ஒத்துபோவதே இந்த இரண்டு கட்சிகளும், பஞ்ச கொள்கைகள் எனப்படும் ஏனைய பொருளாதார, அபிவிருத்தி நிலைமையில் தமக்கிடையில் ஒத்துழைப்பை எட்டியுள்ளன. இது எந்தளவுக்கு இலங்கையின் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகிறது என்பது கேள்விக்குறியே. ஆனால், மக்கள் விடுதலை முன்னணியின் ஆசை வார்த்தைகளை நம்பி, ஜனாதிபதி இன்றைய பொதுத தேர்தலை நடத்தவுள்ளமையானது, அவருடைய அரசியல் வாழ்விலும் சவாலான விடயமே.

பிரதமருக்கும், தமக்கும் இடையிலான அரசியல் இணக்கம் தொடர்பில், விருப்பம் கொண்டுவந்தது ஜனாதிபதி, இவருடைய கட்சியின் முக்கிய உறுப்பினர்களுக்குக்கூட தெரியாமலேயே நாடாளுமன்றத்தை கலைத்தார் எனக்கூறப்படுகிறது.

குறிப்பாக, லக்ஷ்மன் கதிர்காமருக்கும், டி.எம்.ஜயரட்ணவுக்கும் தமது அமைச்சரவையில் இடம் கிடைக்கும் என தெரிந்திருக்காத நிலையிலேயே அவர்களுக்கு அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மனோ - மலிக் பேச்சுவார்த்தை இறுதியாக நடைபெற்றபோது, அதில் ஜனாதிபதியின் ஆலோசகர் மனோ தித்தவெல, ஜனாதிபதி, நாடாளுமன்றத்தை ஒருபோதும் கலைக்கப்போவதில்லை என்ற உறுதியை வழங்கியிருந்தார் எனினும், முன்னர் பிரதமர் அமெரிக்கா சென்றிருந்த வேளையில், மூன்று அமைச்சுக்களை கையேறறமையை போல, தற்சமயம் இவர் தாய்லாந்துக்கு செல்லவிருக்கும் நிலையில், அவரின் அமைச்சரவையை ஜனாதிபதி பொறுப்பேற்கலாம் என நகைச்சுவையாகத் தெரிவித்திருந்தார்.

இதனை நம்பியே பிரதம மந்திரியும், வார இறுதி விடுமுறையை கழிப்பதற்கு பெந்தோட்டைக்கு சென்றிருந்தார். ஆனால், அதற்குள் மக்கள் விடுதலை முன்னணியின் ஆலோசனை ஜனாதிபதியை மாற்றியமைத்து விட்டது. ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைத்தது மாத்திரமன்றி, தற்சமயம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி மீண்டும் இடம் பெற்றுவிடக்கூடாது என்பதில் தீவிர கவனத்தைச் செலுத்திவருகிறார்.

இதன் அடிப்படையிலே அவர், ரணிலுக்கு அரசாங்கம் என்ற அளவில் உதவக்கூடிய தேர்தல் பிரசாரங்களையெல்லாம் அவர் தடை செய்துவருகிறார். இந்த நிலையில், இலங்கையில் தனிக்கட்சி ஆட்சியமைக்கும் நிலை இன்று மாறிப்போய், கூட்டமைப்பு தேர்தல் களமே முன்னிலை வகிக்கிறது. இது மக்கள் மத்தியில் ஜனநாயகம் எனக் கூறிக்கொள்ளும் கட்சிகள் மீது ஏற்பட்டுள்ள மதிப்புக் குறைந்து விட்டதை எடுத்துக்காட்டுகிறது. அதேவேளை, கூட்டமைப்புகளும், கொள்கை ரீதியாக அன்றி, தேர்தல் என்ற ரீதியிலேயே ஒன்றுபடுவதாலும் அதன் மீதும் நம்பிக்கையில்லை என்பதில் சந்தேகமில்லை. ☆

செய்திக் கட்டுரை

நி.நிதர்சனா

# இன்றைய காலத்து இளைஞர்கள் தேவை கருதி செயற்படுவதில்லை!

இன்றைய காலத்து இளைஞர்கள் போதைப் பொருள் பாவனையில் மூழ்கியே காணப்படுகின்றார்கள். இவர்களின் மீது கொலை, கொள்ளை, பாலியல் என குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டே வருகின்றன. இளைஞர்கள் தவறான பாதையில் செல்வதற்குக் காரணங்களும் இருக்கத்தான் செய்கின்றன. இதற்கான காரணங்கள் மறைக்கப்படவோ, மறுக்கப் படவோ முடியாதநிலையாகும்.

வீதிகளில் செல்பவர்களில், சந்திகளில் நின்று அரட்டை அடிப்பவர்களில், மதுபான நிலையங்களில், சினிமா திரையரங்குகளில் இப்படியான இடங்களில் கூடுதலாகக் காணப் படுபவர்கள் இளைஞர்களே.

சமூகத்துக்கு உதவாத சினிமாப் படங்களைப் பார்த்து, கதாநாயகர் போல தங்களையும் அடையாளப்படுத்தி வீதியால் செல்லும் பெண்களைக் கேலி செய்வதும், சேட்டை செய்வதும் தங்களுக்குப்பிடித்த பெண்களுக்குப் பின்னால் செல்வதும் - இப்படியாக நேரத்தைக் கழிக்கின்றார்கள். தங்களைப் பிறரிடம் வித்தியாசமாகவும், எடுப்பாகவும் காட்டுவதற்காக வாயில் சிகரட்டுடன் அலைந்து திரிகின்றார்கள்.

இவ்வாறு இளைஞர்கள் சீரழிந்து செல்வதால், எமது நாட்டு இளைய சமுதாயம் சீர்குலைந்து அழிந்துவிடக்கூடிய சந்தர்ப்பங்கள் நிறையவே இருக்கின்றன. இவர்களின் தேவைகளை பெற்றோர்கள் அறிந்து அதற்கேற்ப நிறைவேற்றவேண்டும். வீட்டிலிருக்கின்றபோது கண்டும் காணாததுபோல் இருந்துவிடவேண்டாம். அவர்களிடம் அக்கறையுடன் அன்பாகப் பேசுங்கள். நல்ல வழிகளைச் சொல்லிக் கொடுத்து அதனால் ஏற்படும் நன்மை - தீமைகளை இனங்கண்டு புரியவைத்து, தாங்களாகவே சிந்திக்கத் தூண்டுங்கள். இது பெற்றோரின் பொறுப்பு மட்டுமல்ல, கடமையுமாகும். இளைஞர்கள்மீது அதிக கட்டுப்பாடுகளை விதிக்காது, அவர்களுடைய இலட்சியத்துக்கு உதவிபுரியவேண்டும்.

அநேகமான இளைஞர்கள் வாழ்க்கையில் கூடுதலான தோல்விகளைக் கண்டதினால் மீண்டுவிட முடியுமென்ற தன்னம்பிக்கை இழந்து தற்கொலைதான் முடிவென்று, தற்கொலை செய்ய முயற்சி செய்கின்றார்கள். இப்படியான விபரீத முடிவுகளை எடுப்பவர்கள் என்ன பிழை விடுகிறார்கள், அதனைத் தெரிவுசெய்து அதற்கேற்ப தவறின் பிழையையும் அதன் சரியையும் உணர்த்தவேண்டும்.

இளைஞர்களின் மற்றொரு பக்கம் சினிமா- இது யாரையும் விட்டுவைக்கவில்லை. எல்லோரையும் தன்பக்கம் இழுத்த முதல் ஊடகம் சினிமா. கூடுதலாக இளைஞர்கள்தான் இதில் மூழ்குகின்றார்கள். சினிமா பார்ப்பது பிழையல்ல. சமூகத்தின் பார்வையிலுள்ள நல்ல கருத்துள்ள படங்களை பாருங்கள். அதை விட்டுவிட்டு தரக்குறைவான சினிமாப் படங்களைப் பார்த்து நீங்களும் கெட்டுவிடாதீர்கள். மற்றவர்களையும் கெடுத்துவிடாதீர்கள்.

பல்வேறுபட்ட நண்பர்கள் - ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக இருப்பார்கள். இவர்களுடன் கூட்டுச்சேரும்போது, அவர்களிடத்தே உள்ள பழக்க வழக்கங்களும் இவர்களிடத்தேயும் தொற்றிவிடுகின்றன. அதாவது, நெடுநாள் பழக்கப்பட்ட நண்பன் எது செய்கின்றானோ, அதையே செய்யத்தூண்டும் நண்பர்களோடு ஒன்றாகச் சேரும்போது ஒரு துணிவு ஏற்பட்டுவிடுகின்றது இவர்களிடம். ஒரு தவறினை மறைப்பதற்காக மேலும் பல தவறுகளை செய்கின்றார்கள். இவ்வாறான நடவடிக்கைகளினால் பாதிக்கப்படுவது இளைஞர்கள் தான். இளைஞர்கள் இந்த நிலையை மாற்றி, நல்வழியில் நடந்து எமதுநாட்டு முன்னேற்றத்திற்கு பாடுபடுவார்களாயின் - எமது நாடு மட்டுமல்ல எமது நாட்டு இளைஞர்களுக்கும் நல்லதொரு எதிர்காலம் உண்டு என்பது நிச்சயமாகும். ☆

# கண்ணாடியிலான நீச்சல் தடாகம் இடிந்து விழுந்ததில்

# ரஷ்யாவில் 21 பேர் பலி; நூற்றுக்கு மேற்பட்டோர் காயம்!



ரஷ்யாவில் கண்ணாடியில் கூரை அமைக்கப்பட்டிருந்த நீச்சல் தடாகமொன்றின் கூரை உடைந்து விழுந்ததில் 21 பேர்வரை கொல்லப்பட்டும் 100 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துமுள்ளதாகவும், கொல்லப்பட்டவர்களில் நால்வர் சிறுவர்கள் எனவும் அவசரகால அமைச்சைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் மொஸ்கோவின் தென்பகுதியில் அமைந்துள்ள 'ராஷன்வால்' நீச்சல் தடாகத்தில் இடம்பெற்றது.

பலவீனமான கட்டுமானமும், கூரையின் மீது அதிக அளவில் பனிக்கட்டி படிந்திருந்ததுமே விபத்திற்குக் காரணமெனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், கூரை இடிந்து விழுந்தவுடன் பலர் அவசரத்தில் நீச்சல் ஆடைகளுடன் மிகுந்த குளிருடைய கட்டடத்தின் வெளிப்பகுதியை நோக்கி வெளியேறியதாகவும் ஏனையவர்கள் கூரையின் இடிபாடுகளுக்கிடையில் சிக்கிக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இடிபாடுகளின் மத்தியிலிருந்து மனிதக் குரல்களை அவதானித்த வண்ணம் 1000 இற்கும் மேற்பட்ட மீட்புப் பணியாளர்கள் தேடுதல் மேற்கொண்டு வருகின்றனர். ஈடுபாடுகளின் மத்தியில் சிக்கியுள்ளவர்கள் குளிரினால் உறைந்துபோகாதிருப்பதற்காக சூடான காற்றை இடிந்த கண்ணாடிக் குவியல்களுக்கூடாக செலுத்திவருவதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.



## ஜோன் ஹரிக்கு தொடரும் வெற்றிகள்

(வொஷிங்ரன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜோன் ஹெரி தற்போது நெவாடா வொஷிங்ரன், கோகுசி ஆகிய இடங்களிலும் வெற்றிபெற்றுள்ளார்.

இவர் இதுவரை 16 மாநிலங்களில், 14 இடங்களில் வெற்றி பெற்றுள்ளார். வின்கொன்சியிலும் அவர் வெற்றிபெறலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது.

மேலும் ஹெரியுடன் போட்டியிடும் ஜோன் எட்வாட் விஷ் கொன்சில் வெற்றியடையத் தவறும் நிலையில் ஜனாதிபதி தேர்விற்கான போட்டியிலிருந்து விலகப்போவதாக ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, வெஸ்லே கிளாக் போட்டியிலிருந்து விலகி ஜோன் ஹெரிக்கு உதவப் போவதாக தெரிவித்துள்ளார்.

உலக நோக்கு

# கெயிற்றி அகதிகளுக்கான உதவிகளை போராளிகள் தடை செய்துவருகின்றனர்

## சர்வதேச தொண்டு நிறுவனங்கள் தெரிவிப்பு



கெயிற்றியின் வட பிரதேசத்தில் தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்கான மருந்து, உணவுப் பொருட்கள் ஆகியவற்றை எடுத்துச்செல்வதை போராளிக் குழுக்கள் தடைசெய்து வருவதாக சர்வதேச தொண்டு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

உணவு, மருந்து ஆகியவற்றுக்கான விநியோகப் பாதையில் போராளிக்குழுக்கள் பாரிய கற்களை நிரப்பியும், எரிந்த கார்களை நிறுத்தியுமுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. இதனிடையே, போராளிகள் வசமுள்ள வட பிரதேசத்தில் தங்கியுள்ள அகதிகளுக்கான மனிதநேயப் பணிகளின் தேவையை, சர்வதேச தொண்டு ஸ்தாபனங்கள் முன்னரே குறிப்பிட்டிருந்தன.

கெயிற்றியின் முன்னாள் அரசின் ஆயுதப் படையைச் சேர்ந்தவர்களும், வன்முறைக் கும்பல்களும் இணைந்து போரளிக்குழு ஒன்றினை அமைத்து, நாட்டின் நான்காவது பெரிய நகரான கொனெய்வை முதலில் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்திருந்தனர்: தற்போது நாட்டின் 11 நகரங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர்.

நாட்டின் தற்போதைய ஜனாதிபதி ஜீன் பேட்டன் அறிஸ்ரைட் பதவியிலிருந்து விலக வேண்டுமென போராளிக் குழுக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன. இதனிடையே, தனது பதவிக் காலம் முடியும் வரை பதவியிலிருந்து விலகப்போவதில்லை என, வாதிட்டு வந்த ஜனாதிபதி ஜீன் பேட்டன் மேலும் ஒரு பிரச்சினைக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. கெயிற்றியின் முன்னாள பொலிஸ் தலைமை அதிகாரி கை பிலிப்பியம், முன்னாள் நடாளுமன்றத் தலைவர் லுயிஷ் யொடெல் சம்பிளெயினும் போராளிக் குழுக்களுக்கு உதவப் போவதாக சனிக்கிழமை தெரிவித்திருந்தனர்.

இதனிடையே, போராளிக்குழுக்களுக்கும் தமக்கும் எதுவித தொடர்புமில்லையென தெரிவித்துவரும் எதிர்க்கட்சியினர், ஜனாதிபதி ஜீன பேட்டன் பதவி விலகவேண்டும் என தெரிவித்து வருகின்றனர். ஆனால் இவ்வார ஆரம்பத்தில் அமெரிக்க இராஜங்க அமைச்சர் கொலின் பவல், ஜனாதிபதி ஜீன் பேட்டன் பதவி விலகத் தேவையில்லை என குறிப்பிட்டிருந்தார்.

இதனிடையே, ஐக்கிய நாடுகளின் உலக உணவு ஸ்தாபனத்தை சேர்ந்த அதிகாரிகள், பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் 268,000 மக்கள் உணவிற்காக சர்வதேச உதவி ஸ்தாபனங்களை எதிர்நோக்கிக் காத்திருப்பதாகவும், உணவுப் பொருட்களை பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அனுப்பிவைக்க முடியாதிருப்பதாகவும் தெரிவித்தனர்.

# உ இலட்சத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் ஒவ்வொரு ஆண்டும் புற்றுநோயால் பலி!

## ஆய்வறிக்கையில் தெரிவிப்பு

ஒவ்வொரு ஆண்டும் புற்றுநோயினால் 200,000 மேற்பட்ட சிறுவர்கள் உலகில் பலியாகின்றனர். இந்த நோயாளிகளுக்கு எதுவித மான மருத்துவ சிகிச்சையும் கிடைப்பதில்லை என அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நோயினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு மருத்துவ வசதிகளை வழங்குவதற்கு அதிக பணம் தேவைப்படுவதாக புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் பெற்றோர்களினால் உருவாக்கப்பட்ட அமைப்பொன்று தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பு ஐக்கிய நாடுகளின் செயலாளர் கோபி அனானுக்கு கடிதமொன்றின் மூலம் தமது கோரிக்கையை தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சர்வதேச குழந்தைகள் புற்றுநோய் தினமாக கொண்டாடப்பட்டுள்ளது.

ஐவருக்கு இந்த நோய் ஏற்படும்போது ஒருவர் அபிவிருத்தி அடைந்த நாட்டைச் சேர்ந்தவராகக் காணப்படுகின்றார்.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ வசதிகள் கிடைப்பதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கோபி அனான் உலகநாடுகள் நிதியுதவி அளிக்க முற்பட்டால் இந்த நோயை இலகுவாக குணப்படுத்தலாம் என, குழந்தைகளுக்கான புற்றுநோய் அமைப்பின் உதவித் தலைவர் கொப்தாக் ரெல் தெரிவித்தார். இதனிடையே, பிரிட்டனில் புற்றுநோய் ஆராய்ச்சி நிலையத்தில் பேராசிரியராகக் கடமையாற்றும் ரிம் ஏடன் தெரிவிக்கும்போது, புற்றுநோய்க்கு சிகிச்சை அளிப்பது அதிக செலவு மிக்கதென்ற கருத்து தவறானதெனவும், புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட ஒருவரை காப்பாற்றுவதற்கு 20 பவுண்ஸ் போதுமெனவும் தெரிவித்தார்.

உலகில் பல நாடுகளில் குழந்தைகளுக்கு ஏற்படும் புற்றுநோய், அவர்களுக்கு மரணதண்டணை அளிக்கப்பட்டுவிட்டதாக கருதப்படுவதாக, பிரிட்டிஷ் புற்றுநோய் ஆய்வு மையத்தின் தலைவரான டொக்டர் ஜோன் ரோய் தெரிவித்தார்.

## சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பர்மிய எதிர்க்கட்சித் தலைவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்!

பர்மாவின் எதிர்க்கட்சிகளில் ஒன்றான ஜன நாயக கூட்டமைப்பின் தலைவர் ரின்ஓ சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாக அவரது குடும்ப அங்கத்தவர்கள் தெரிவித்தனர்.

கடந்த மே மாதம் பர்மிய இராணுவத்துக்கு சார்பானவர்களுக்கும், எதிர்க்கட்சியினருக்கும் இடையே ஏற்பட்டிருந்த மோதல்களின் பின்ரின் ஓ கைது செய்யப்பட்டிருந்தார். இவர் பர்மாவின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள சிறைச்சாலை ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். பின்னர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு புலனாய்வுப் பிரிவினரால் குடும்பத்தவரிடம் சனிக்கிழமை ஒப்படைக்கப்பட்டிருப்பதாக ஏ.எப்பி செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

பர்மாவின் மீது ஏற்படுத்தப்பட்டுவரும் சர்வதேச அழுத்தம் காரணமாக இதுவரை 150 அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்பட்டிருந்த ஜனநாயகத்துக்கும், புதிய அரசியல் யாப்புக்குமான வரைபினை செயற்படுத்தப்போவதாக்வும் பர்மிய அரசு



இந்தியாவில் காதலர் தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, விஸ்வ இந்து பரிஷத் நடத்திய எதிர்ப்புப் போராட்டம்.

# எல்லைக் கண்காணிப்பை அதிகரிப்பதற்கு ஈராக்கின் அயல்நாடுகள் முன்வரவேண்டும்!

## அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் கோரிக்கை

(குவைத்)

குவைத்துக்கு விஜயம்செய்துள்ள ஈராக் ஆளும் சபையின் வெளிநாட்டமைச்சர், வெளிநாட்டமைச்சர்கள் மத்தியில் உரையாற்றும் போது, ஈராக்கை சுற்றியுள்ள நாடுகள் எல்லைக் கண்காணிப்பினை அதிகரிக்குமாறு கேட்டிருந்தார். ஈராக்கில் பொலிஸ், இராணுவ நிலையங்கள் மீது நடாத்தப்படும் தாக்குதல்கள், ஈராக்கில் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு தீவிரவாத அமைப்பினரை மீட்பதற்காக நடத்தப்படுவதாகவும் இதனால் இத்தாக்குதல்களில் எல்லை நாடுகளிலிருந்து உருவாகியுள்ள தீவிரவாதிகள் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் பாக்தாத்தின் தென்பகுதியான பலூஜாவில் பொலிஸ் நிலையம், பாதுகாப்புப்படை அலுவலகங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் 20 இற்கும் மேற்பட்ட கைதிகள் மீட்கப்பட்டிருந்தனர். சனிக்கிழமை பலூஜாவில் நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் 22 பேர்வரை கொல்லப்பட்டிருந்தனர். இவர்களில் அனேகமானவர்கள் பொலிஸார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மோட்டார்க் குண்டு, கிரனைட், இயந்திரத் துப்பாக்கிகள் ஆகியவற்றின் துணையுடன் பகல் வேளையில் பொலிஸ் நிலையம், பாதுகாப்புப் படையினரின் கட்டடங்கள் ஆகியவற்றில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 20 இற்கும் மேற்பட்ட கைதிகள் மீட்டுச் செல்லப்பட்டனர். இதற்குப் பின்னர் படையினரால் நடத்தப்பட்ட வான் தாக்குதல்களில் 100 இற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர்.

இதனிடையே, குவைத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஜோர்தான், ஈரான், துருக்கி, குவைத், எகிப்து, ஆகிய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் பங்குகொண்டிருந்தனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தேர்தல் பிரசாரங்களில் ஈ.பி.டி.பி இறங்கியது

எதிர்வரும் ஏப்ரல் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான பிரசாரப்பணிகளில் அரசியல் கட்சிகள் ஈடுபடத்தொடங்கியுள்ளன. குடாநாட்டிலும் தேர்தல் பிரசாரப் பணிகள் சில கட்சிகளினால் ஆங்காங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஈ.பி.டி.பியினர் தமது முகாம்களுக்கு முன்னால் தமது சின்னமான வீணையைதாங்கிய தேர்தல் பதாகைகள், கட்அவுட்டுக்களை நிறுத்தி வருகின்றனர். கடந்த தேர்தலின்போது பயன்படுத்தப்பட்ட கட்அவுட்டுக்களே இம்முறை மீண்டும் பிரசாரப்பணிகளுக்காக கட்டப்பட்டுள்ளதாக அவதானிகள் தெரிவித்தனர்.

இதனைவிட, வேறு சில கட்சிகளும் பிரசாரப்பணியில் இறங்கியுள்ளன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கான தேர்தல் சின்னம் இன்னும் உறுதிசெய்யப்படாத காரணத்தினால், கூட்டமைப்பு தேர்தல் பிரசாரப் பணிகளை பெரியளவில் ஆரம்பிக்கவில்லை.

கிராமமட்டங்களிலும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடாத்துவது தொடர்பாக, கிராமிய மட்ட பிரமுகர்களுடன் அரசியல் கட்சியினர் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (94)

# பொ.ஐ.முவின் 8 முன்னாள் எம்.பிக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாறத் திட்டம்

(கொழும்பு)

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டதையடுத்து, பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 8 பேர் ஐக்கிய தேசிய கட்சிக்குத் தாவத் திட்டமிட்டிருப்பதாக கூறப்படுகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து கட்சிமாறும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பெரும் சலுகைகளை வழங்குவதற்கு ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் தெரியவருகிறது.

கட்சி மாறத் திட்டமிட்டிருப்போரில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் அமைச்சர்கள் றொனிடிமெல், ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, ஏ.எச்.எம்.பௌசி, சாலிந்த திஸநாயக்க மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திலினபண்டார தென்னக்கோன், மல்லிகா டிமெல், சரண குணவர்த்தன ஆகியோர் அடங்குகின்றார்கள்.

முன்னர் பொதுஜன முன்னணியின் அரசாங்கத்தில், பிரதி அமைச்சராக இருந்த அத்துல நிமலசிறி ஜயசிங்க ஏற்கனவே கட்சிமாறி ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுவிட்டார்.

இது குறித்துத் தகவல் வெளியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரபூர்வ வட்டாரங்கள், ஜே.வி.பியுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி கூட்டணியை ஏற்படுத்திக் கொண்டதனால் விரக்தி அடைந்திருக்கும் குழுவினரே, ஐக்கிய தேசியக்கட்சிக்கு மாறத்திட்டமிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தக்குழுவினர் - ஜே.வி.பியுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டணி அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்ததுடன் - இது தொடர்பாகத் தமது தலைமைக்கும் தமது அதிருப்தியைத் தெரிவித்திருந்தனர். ஆனால், தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையிலேயே இவர்கள் கட்சி மாறத் திட்டமிட்டிருப்பதாக ஐக்கிய தேசியக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, கட்டாணத் தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தாம் ஐக்கியதேசியக் கட்சியுடன் இணைவது தொடர்பாக எந்தத் திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை எனத் தெரிவித்தார். தாம் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைவது தொடர்பாக வெளியான செய்தி வெறும் வதந்தி என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்களோ ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கட்சிமாறத் தயாராக இருப்பதனை உறுதி செய்தன.

ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தமது ஆதரவாளர்களுக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் பட்டியலில் இடம் ஒதுக்கப்படுகிறதா என்பதனை அவதானித்து கட்சி தாவத் திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, காணி அமைச்சர் ராஜித சேனாரத்தின குறைந்தது ஐந்து பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும், 15 மாகாணசபை உறுப்பினர்களும் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர், ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாறவுள்ளதாகத் தெரிவித்தார்.

இதனிடையே, சிறிலங்கா சுதந்திரக் கட்சியிருந்து பல முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாவத திட்டமிட்டிருப்பதாகச் செய்திகள் வெளியானதை அடுத்து அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன, தமது கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தேர்தலில் போட்டியிட இடம் வழங்கப்படும் என்று உறுதியளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.கவுடன் இணைந்து வென்றாலும் இ.தொ.கா பிரிந்து செல்லலாம்!

## தொண்டமான் - ரணில் இரகசிய ஒப்பந்தம்

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்கும் தேர்தலின் பின்னர் சுயாதீனமாகச் செயற்படுவதற்கும் வழிசெய்யும் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கைச்சாத்திட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கியதேசியக் கட்சியின் உள்ளக வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெளியிடப்பட்டு செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது,

ஐ.தே.கவுடன் ஆறுமுகம் தொண்டமான் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்பாட்டிற்கமைய தேர்தலில் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டு வெற்றி பெற்றபின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணையமுடியும்.

இந்த உடன்பாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஆறுமுகம் தொண்டமானும் கைச்சாத்திட்டனர்.

இதேபோன்றதொரு உடன்பாட்டில் 1994 ஆம் ஆண்டுத் தேர்தலில் முன்னாள் அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமானும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் செய்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

# பொதுத் தேர்தல் பிரசார பேரணியை அனுராதபுரத்தில் ஆரம்பிக்கவுள்ளது

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் - ஜே.வி.பியும் இணைந்து அண்மையில் உருவாக்கிய கூட்டணியான- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, நாடாளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரங்களை எதிர்வரும் 26 ஆம் திகதி அநுராதபுரத்தில் ஆரம்பிக்கவுள்ளது.

இந்த தேர்தல் பிரச்சார ஆரம்ப நிகழ்வில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அநுராதபுரம் சிறிமாபோதியில் நடைபெறவுள்ள விசேட மதவழிபாடுகளில் கலந்து கொண்டபின்னர், அரசியற் கட்சிகளின் தலைவர்கள் தமது தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

இந்த ஆரம்ப தேர்தல் பிரசார பேரணியையடுத்து, நாடுமுழுவதும் 150 பிரசார பேரணிகளையும் 5000 கூட்டங்களையும் வீட்டுக்குவீடு பிரசாரங்களையும் மேற்கொள்ளவுள்ளதாக அந்தக் கூட்டணியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# தேர்தல் பிரசாரங்களுக்கு கட்சிகள் அரச சொத்துக்களைப்பாவிக்க தடை

## தேர்தல் ஆணையாளர் உத்தரவு

(கொழும்பு)

நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் நடைபெறும் காலத்தில், அரசாங்கத்துக்கு அல்லது அரச கூட்டுத்தாபனங்களுக்கு சொந்தமான அசையாத அல்லது அசையும் சொத்துக்களை, தேர்தல் பிரசாரத்துக்கு பயன்படுத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தடை விதித்துள்ளார்.

இதன்படி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் சுயேட்சையாகவோ அல்லது அரசியல் கட்சிசார்பாகவோ, உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு இந்தச் சொத்துக்களைப் பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படும்வரை தேர்தல்களை நடத்துவதற்கான அதிகாரம் மற்றும் கடமைகள் தமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், இதன்படி இந்த தடை உத்தரவு பிறப்பிக்கபட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

## நீதிமன்ற...

சின்னத்திலேயே போட்டியிடக்கூடிய சாத்தியம் இருப்பதாக அவர் கூறினார்.

ஆனந்த சங்கரியின் அறிக்கைகளால், தமிழ் மக்கள் குழப்பமடையத் தேவையில்லை. தமிழ் கூட்டமைப்பு உறுதியான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது. தமிழ் மக்கள் அனைவரும் ஒரே இலட்சியத்துக்காக இணைந்து வாக்களிக்கும் வகையில் கூட்டமைப்பின் தேர்தல் சின்னம் அமையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். (01)

## சிறியரக கைத்துப்பாக்கி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது

(கொழும்பு)

இலங்கையில் மிகவும் சிறியரக கைத்துப்பாக்கிகளின் பாவனை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேல்மாகாண பொலிஸ் சிறியரக கைத்துப்பாக்கியையே கைப்பற்றினர் நவீனரக வசதிகளுடன் கூடிய இந்த கைதுப்பாக்கி 2½ அங்குல நீளத்தை கொண்டதாகும்.

இராணுவ அதிகாரி ஒருவர் 20 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டதாக கூறப்படும் இந்த துப்பாக்கி வியாபாரி ஒருவரிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

## தேர்தல்...

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவராக இந்த மாத முற்பகுதியில் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர், மேஜர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வது இதுதான் முதற்தடவையாகும்.

புறூவ் ஹொவ்டே கடந்த வாரம் கிழக்குப்பகுதிக்கு விஜயம் செய்து படைத்தரப்புடனும் மற்றும் புலிகள் தரப்புடனும் பேச்சுக்கள் நடத்தினார்.

இந்த வாரம் கிளிநொச்சியில் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை ஜெனரல் புறூவ் ஹொவ்டே சந்தித்துப் பேச்சு நடத்தவிருப்பதாகவும் அக்னஸ் பிறகடோட்ரயர் தெரிவித்தார்.

## பேரினவாத...

கட்சிகள் அளித்தவாக்குகளும் பின்னர் அவர்கள் நடந்துகொண்ட முறைகளையும் தமிழ் மக்கள் நன்கு அறிந்துள்ளார்கள்.

எனவே, இம்முறை நடைபெறவுள்ள தேர்தலில் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது குறித்து முடிவெடுப்பார்கள்.

தமிழ்க் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுடன் விரைவில் கலந்துரையாடல்கள், சந்திப்புகளை நடத்தவுள்ளோம். அதற்குமுன் எமது தலைமைப்பீடத்துடன் கலந்தாலோசித்த பின்னரே இதுவிடயம் தொடர்பாக மேலதிக விபரங்களைத் தரமுடியும் எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

## பொதுத் தேர்....

வுள்ளது.

இதனால், தேர்தல் தொடர்பான கடமைப் பொறுப்புக்கள் பொலிஸாருக்கு அதிகம் இருப்பதாலும், பாதுகாப்பு வழங்கும் பொறுப்பு இருப்பதாலுமே பொலிஸாரின் விடுமுறைகள் அனைத்தும் ரத்துச் செயயப்பட்டிருக்கின்றன.

நாளைமுதல் எதிர்வரும் 15 ஆம் திகதிவரையான காலப்பகுதிவரையே பொலிஸாரின் விடுமுறைகள் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன.

# விலகிக்கொள்வதாக...

காரணமோ கிடையாது.

யாழ். மக்கள் ஒற்றுமையையும் சுதந்திர உணர்வையும் வெளிப்படுத்தி அரசியல் ரீதியில் நல்ல பெறுபேறுகளை பெறவேண்டும். அவ்வேளை - மக்களுடன் நின்று நானும் வாக்களிப்பதற்காகவே இந்த முடிவை நான் எடுத்துள்ளேன்.

நான் மூன்று வருடங்கள் மாத்திரம் அரசியலில் மக்கள் பிரதிநிதியாகக் கடமையாற்றியிருந்தபோதிலும் மனம் நிறைவடையத்தக்க வகையில் ஓரளவிற்கு என்னால் இயன்ற பணிகளைச் செய்திருக்கின்றேன் எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

இந்த அறிவித்தல் தொடர்பாக நாம் அவரிடம் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு கேட்டபோது,

நான் குடாநாட்டு அரசியலிலிருந்து ஒதுங்குவதாகத் தீர்மானித்துள்ளேன். ஆனால், அதற்கான காரணங்கள் எதையும் கூறவிரும்பவில்லை. யாழ். மாவட்டத்தில் மீண்டும் ஒரு தேர்தலில் நான் பங்குபற்ற விரும்பவில்லை.

எனினும், விட்டுக்கொடுப்பு நோக்குடன் நான் அரசியலிருந்து விலகுகிறேன் என்றே கூறமுடியும். அதுபற்றி மேலதிகமாக என்னால் எதையும் தெரிவிக்கமுடியாது எனத் தெரிவித்தார். (ப-91-52)

# அம்பாறை...

உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த வாக்காளர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதிக்குள் வாக்களிக்க முடியாததாலேயே இந்தத் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

நான்கு பேரால் தொடுக்கப்பட்ட இந்த அடிப்படை உரிமை மீறல் தொடர்பான மனு மீதான விசாரணை கடந்த வாரம் உயர் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கத் தயார் எனத் தெரிவித்த தேர்தல் ஆணையாளர் இதனை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் செயற்படுத்த முடியாது எனவும் தெரிவித்திருந்தார்.

இதன் காரணமாகவே இந்த ஏழு உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்த்ல், தேர்தல் ஆணையாளரால் ஒத்திவைக்கப்பட்டது.

2000 ஆம் ஆண்டில் வாக்காளர் பதிவின்படி தேர்தல் நடத்தப்படுமாக இருந்தால், சுமார் 11 ஆயிரம் வாக்களிக்கத் தகுதியுடைய வாக்காளர்கள், வாக்களிக்க முடியாமற் போயிருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# இந்தமாத இறுதியில்...

மின்சார சபைக்கு எதுவித பாதிப்பும் இல்லையெனத் தெரிவித்த சுபைர்- நானூறு அலகுகளுக்கு அப்பால் பாவிப்பவர்களுக்கே இந்த அதிகரித்த ஒரு ரூபா கட்டணம் அறவிடப்படுமெனவும் தெரிவித்தார்.

அதிக உற்பத்தி செலவைக் கொண்ட உயர் மின்வலு மற்றும் அனல்மின்நிலையம் என இருவகை. மின் உற்பத்தியை இலங்கை மின்சார சபை மேற்கொள்கின்றது.

எனவே இந்த அதிகரித்த மின் உற்பத்தி செலவை ஈடுசெய்வதற்கு மின் கட்டணங்களை அதிகரிக்குமாறு அரசாங்கத்தை மின்சாரசபை கோரியுள்ளதெனவும் சுபைர் தெரிவித்தார்.

தற்போது நீர்நிலைகளில் மழைவீழ்ச்சி குறைந்து வரட்சியானநிலை காணப்படுகின்றபோதும் எதிர்காலத்தில் எந்தவொரு மின்வெட்டும் இருக்காதெனவும் அவர் தெரிவித்தார்.

மின்சாரசபை தற்போது அறுபது மெகாவோட்ஸ் மின் உற்பத்தியை மூன்று மில்லியன் செலவழித்து உற்பத்தி செய்கின்றது. இந்த உற்பத்திக்கான மூலப்பொருள் கொள்வனவை இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்தும் பெறுவதாக மின்சார சபையின் பொது முகாமையாளர் டி.ஜி.விஜயரட்ண தெரிவித்தார்.

New Stocks Available
மிகக் குறைந்த பணத்துடன் மிகப் பெறுமதியானதை வீட்டுக்கு எடுத்துச் செல்லுங்கள்
Pentium I, II, III
IBM, Compaq, Dell
ரூ12,000/- லிருந்து
இலவச பராமரிப்பு சேவையுடன்
STP Your Partner in IT Solution
73, Palaly Road, Kantharmadam, Jaffna
T.P:021 222 2674, email: stpworld@sltnet.lk

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.